பக்கங்கள் : இருபத்து நான்கு

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 31 புதன்கிழமை (15.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 209

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

கீழே விழுந்து படுகாயமடைந்த முதியவர் மரணம்

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் பேருந்தில் இருந்து இறங்க முற்பட்ட முதியவர் கீழே விழுந்து படு காயமடைந்திருந்த 23

தேர்தல் கடமைகளில் இராணுவத்துக்கு இடமில்லை

பொலிஸார் மட்டுமே பணிபுரிவர்

யாழில் மகிந்த தேசப்பிரிய

9ஆம் பக்கம் பார்க்க

கொரோனா வைரஸ் சமூகத்தில் வேகமாகப் பரவும் வாய்ப்புள்ளது

தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

புதிய கொரோனா வைரஸ் சமூகத்தில் பரவினால், நிலைமை மிகவும் ஆபத்தானதாக இருக்கும் என்பதுடன் தற்போது உயிருடன் உள்ள சிலரை காண்பதும் அரிது என எச்சரிக்கை விடுத்துள்ளார் தொற்று நோயியல் தலைமை நிபுணர் டாக்டர் சுதத் சமரவீர.

நேற்றையதினம் ஊடகவியலாளர் சந்திப் 23

அடுத்துவரும் சில தினங்கள் கொரோனாவில் ஆபத்து பாதுகாப்பாக இருங்கள்

நாட்டு மக்களிடம் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கோரிக்கை

(கொழும்பு)

அடுத்துவரும் சில தினங்களில் சமூகத்துக்கு கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்படும் ஆபத்து இருப்பதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதனால் கொரோனா வைரஸில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆலோசனைகளை அப்படியே பின்பற்றுமாறு மக்களிடம் கோரிக்கை விடுப்பதாக இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

இரு பல்கலைக்கழக மாணவிகளுக்கும் கொரோனா தொற்று இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலையின் கிளி நொச்சி வளாக மாணவி மற்றும் கைதடி சித்த மருத்துவ பீட மாணவி ஆகியோருக்கு கொரோனாத் தொற்று இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் கொரோனா சந்தே 23

விபத்துக்குள்ளான முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்துக்குள்ளான முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி டச் வீதியில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச் சைக்காக அனு 23

கொரோனா தொற்றிலிருந்து நாட்டு மக்களைக் காப்பேன்

ஜனாதிபதி கோட்டா உறுதி

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பர வல் தீவிரமடை வதைக் கட்டுப் 23

தனிமைப்படுத்தப்பட்டோர் மாலை 4 மணிக்கு பின் வாக்களிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

கொரோனா காரணமாக வீடுகளில் சுயதனிமைப்படுத் 23

இலங்கை மீது கடுமையான அணுகுமுறை பிரயோகிக்க வேண்டும்

03ஆம் பக்கம் பார்க்க

வடமராட்சியில் சில வீடுகள் தனிமைப்படுத்தப்பட்டன

(கரணவாய்)

கொரோனா அச்சம் காரணமாக வடமராட்சி யில் சில வீடுகள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. வடமராட்சிக் கிழக்கு உடுத்துறை வேம்படிக் கடற்கரையில் கஞ்சா பொதிகள் 23

அரச சேவைக்கு மீண்டும் சுயகௌரவம்.
பாராளுமன்ற தேர்தல் - 2020
யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
ஐக்கிய மக்கள் சக்தி
அன்புக்குரிய தபால் மூல வாக்காளர்களே...

- துண்டிக்கபட்ட ஊதியம், ஓய்வூதிய கொடுப்பனவானது நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து மீட்டெடுக்கப்படும்.
- அனைத்து அரச ஊழியருக்கும் காணி மற்றும் வீட்டு உரிமை.
- அரச சேவை பிரச்சனைகளை தீர்க்க அர்ப்பணிக்கப்பட்ட தீர்வு திணைக்களம்.
- அரச சேவைக்கு மீண்டும் சுயகௌரவம்.

(C-048)

உங்கள் உரிமையை பாதுகாக்க தொலைபேசி சின்னத்திற்கும் எனது இலக்கம் 2 இற்கும் வாக்களியுங்கள்.

அ.கிருபாகரன்
கிருபா லேணர்ஸ் அதிபர்

X 2

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மரண அறிவித்தல்



இரத்தினம் சிவனேசன்

நாச்சிமார்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவனேசன் அவர்கள் கடந்த 10.07.2020 அன்று நெதர்லாந்தில் இறைபதம் எய்தினார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.07.2020) நெதர்லாந்தில் மதியம் 1.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மருமகன்
அச்சுதன் பகீரதன்
(பொதுச் சுகாதார பரிசோதகர்)

(3306)

மரண அறிவித்தல்



அருட்பணி. R.M.கொர்கோணியஸ் நேசநாயகம்

யாழ்.மறை மாவட்டக் குருவாக இறைபணி யாற்றி வந்த அருட்பணி. R.M.கொர்கோணியஸ் நேசநாயகம் அடிகளார் நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் உடல் அஞ்சலிக்காக யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அடக்க சடங்குத் திருப்பலி மறைமாவட்ட ஆயர் தலைமையில் இன்று (15.07.2020) புதன்கிழமை பி.ப 3.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

நாட்டில் நிலவும் அசாதாரண நிலையைக் கருத்தில் கொண்டு இறைமக்கள் வெவ்வேறு நேரங்களில் வருகைதந்து சமூக இடைவெளியைப் பின்பற்றி அருட்தந்தைக்கு இறுதி அஞ்சலி செலுத்தி, செபித்துச் செல்லுமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:- குருமுதல்வர்
யாழ்.மறை மாவட்டம்

(C-9894)

மரண அறிவித்தல்

இரத்தினசபாபதி சண்முகராசா

[ஓய்வு பெற்ற நூலகர்-
யாழ். மாநகரசபை பொது நூலகம்]

தோற்றம் - 14.08.1933

மறைவு - 14.07.2020

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி சண்முகராசா அவர்கள் நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி-சரஸ்வதி தம்பதியினரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான கோபாலசாமி-ஈஸ்வரி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் வனிதா(பிரான்ஸ்), தயாநிதி, தயாளினி, தக்ஷினி, ராஜகோபால் (பிரான்ஸ்), கஜமுகன், மதுசூதனன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சியாமாசுந்தர்(பிரான்ஸ்), ஜானகிராமன், காலஞ்சென்ற சௌந்தரசிங், வீரசேகரம், சுரேகா (பிரான்ஸ்), ஜெயமதி, தனுஜா(பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும் இலக்கியா, ஒவியா, காவியா, தாரிணி, நரேந்திரன், மாதங்கி, மிலக்ஷா, பவித்திரா, அபிராமி, தனுஷன், இந்துமதி, வினித்தா, மதுரன், சைந்தவி, சஞ்சனா, குருபரன், கிஷானி, கிரியா, கிஷாலினி, தயாபரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

303, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(C-9895)

தகவல்:- குடும்பத்தினர்
Tel : 077 669 1309

கட்சி ஆதரவாளர்களிடையே வேலணையில் மோதல்

இருவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

இரு கட்சி ஆதரவாளர்கள் இடையே ஏற்பட்ட மோதலில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று செவ்வாய்க்கிழமை வேலணை வங்களாவடிப் பகுதியில் இரு கட்சி ஆதரவாளர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் இரு குழுவினருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியுள்ளது.

இதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வேலணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (மு-5, 114)

அந்தியேஷ்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 03.06.2020 புதன்கிழமை அன்று சிவனடி சேர்ந்த

அமரர்

ஜெயமூர்த்தி ரிஷிக்காந்

அவர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகள் இன்று (15.07.2020) புதன் கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 17.07.2020 வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சொர்ணாம்பிகை மண்டபத்திலும் (TCT மண்டபம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்) நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2ம் ஒழுங்கை, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[3308]

- குடும்பத்தினர்
(077 088 4725)

மரண அறிவித்தல்

திருமதி ஜெயக்குமாரி பத்மராஜா

தோற்றம் - 23.06.1975

மறைவு - 14.07.2020

மண்டைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 9/1 கலைவாணி வீதி, டிப்போச் சந்தி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்குமாரி பத்மராஜா நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரமூர்த்தி மற்றும் நடனசுந்தரி தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற பத்மராஜாவின் அன்பு மனைவியும் பத்மகுமார் (S.P.H.I, M.O.H OFFICE-செட்டிக்குளம்), சத்தியகுமார் (senior Financial Consultant, Sri Lanka Insurance), விஜயகுமார் (முன்னாள் பொறுப்பு அதிகாரி, வேலணை பிரதேச சபை உப அலுவலகம் - புங்குடுதீவு), சரத்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வினோஜிகா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜீவிதன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதமதி, அனுஜா (சங்கானை சிவப்பிரகாச ம.வி.), தமிழினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மகாலட்சுமியின் பெறாமகளும் பிரியங்கா, தர்சிகன், பிரியங்கன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (15.07.2020) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சத்தியகுமார் -077 903 7150
விஜயகுமார் - 077 404 7909

(கு)

தகவல்:-
குடும்பத்தினர்

பொறுப்புக் கூறல் விவகாரத்தில்

இலங்கை மீது கடுமையான அணுகுமுறைகளை பிரயோகிக்கவேண்டும்

சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கூட்டாக வலியுறுத்து

(ஜெனிவா)

இலங்கையில் அண்மைக்காலமாக சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாடுகளுக்கான இடைவெளி மிக விரைவாகச் சுருங்கி வருவதாகவும் செயற்பாட்டாளர்கள் இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்பிற்கு உட்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள 7 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், இலங்கையில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படுவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கண்காணிக்க வேண்டும் என்றும் இலங்கையின் மீது இன்னமும் வலுவான அணுகுமுறைகள் பிரயோகிக்கப்படுவது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 44 ஆவது கூட்டத்தொடரில் அமைதியான முறையில் சுதந்திரமாக கூடுவதற்கும், கலந்துரையாடுவதற்குமான உரிமை பற்றிய ஐ.நா விசேட அறிக்கையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சிறுபான்மையினச் சமூகங்களின் உரிமைகளுக்கான சர்வதேசக்குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவைகள் உள்ளிட்ட 7 மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

ஐ.நா. விசேட அறிக்கையாளரினால் சுட்டிக்காட்டப்பட்டதைப் போன்று இலங்கையில் சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி விரைவாகச் சுருங்கி வருகின்றது. கடந்த சில மாதகாலமாக சிவில் சமூக அமைப்புக்கள் இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்பிற்கு உட்பட்டு வருவதுடன், அரசாங்கத்தின் வெவ்வேறு கட்டமைப்புக்களால் விசாரணைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றன.

விசனமளிக்கும் வகையில் கொவிட்-19 கொரோனா வைரஸ் பரவல் கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் கூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்பேற்படுத்தித் தந்துவிட்டது என்பதுடன், இந்நிலைமை சமூகவலைத்தள செயற்பாட்டாளர்களான ரம்ஸி ரஸீக் போன்றவர்களைக் கைது செய்து தடுத்துவைப்பதில் சென்று முடிந்திருக்கிறது. சட்டத்தரணியும், சிறுபான்மை சமூக உரிமைகளுக்கான செயற்பாட்டாளருமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாமல் சுமார் 3 மாதகாலம் வரையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அரசாங்கத்தினால் பல்வேறு ஜனாதிபதி செயலணிகள் நிறுவப்பட்டு வருகின்றன. இத்தீர்மானங்கள் அனைத்தும் பாராளுமன்றத்தின் மேற்பார்வையோ, அனுமதியோ இன்றியே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பாதுகாப்பானதும், ஒழுக்கமானதுமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி முழுவதுமாகப் பாதுகாப்புத்துறையினரை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டிருப்பதுடன், அதன் செயற்பாடுகள் பற்றிய வரையறை தெளிவற்றதாகவும் காணப்படுகின்றது. இது மக்கள் மீது இராணுவ அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம் என்று சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் விசனம் வெளியிட்டிருக்கிறார்கள். அதுமாத்திரமன்றி பொலிஸாருடன் பெருமளவான இராணுவத்தினரும் பணியில் ஈடுபடுத்தப்படுவதுடன், அண்மையில் அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கட்டற்ற அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் அவதானத்திற்குரிய நிலையாகும்.

இந்நிலையில் இலங்கையின் சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பகிரங்கமாகப் பங்கேற்கக் கூடியதும், கருத்து வெளியிடக் கூடியதுமான ஒரே தளமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை விளங்குகின்றது. எனினும் மனித உரிமைகள் பேரவையில் பேசுகின்றவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களும் அதிகரித்துவரும் நிலை காணப்படுகின்றது.

எனவே இலங்கையில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க வேண்டிய கடப்பாடு மனித உரிமைகள் பேரவைக்குக் காணப்படுவதுடன், இலங்கை தொடர்பில் இன்னும் வலுவான அணுகுமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகின்றது. மேலும் தொடர்ந்தும் விசேட ஆணையாளர் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரங்களைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-4)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ் தேர்தல் மாவட்டம்

நேர்மையும் கண்ணியமும் மிகுந்த
அனுபவமும் வெளிப்படைத்தன்மையும் கொண்டவர்களை
எங்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்வோம்.
-வடமராட்சி மக்கள்-

(C-045)

6
தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

7
பாலச்சந்திரன்
கஜதீபன்
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

1 2 3 4 5 6 7 8 9 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

பேரம் பேசினார்கள் மக்களுக்காகவல்ல; தங்களுக்காக-அருந்தவபாலன் சாடல்

(சாவகச்சேரி)

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் தமிழர் விரோதச் செயற்பாடுகளில் இறங்கிய தால் தான் நீதியரசர் விக்னேஸ் வரன் தலைமையில் தமிழ் மக் கள் தேசியக் கூட்டணி என்ற கட்சி ஆரம்பிக்கப்பட்ட தாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் க.அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி -மட்டுவில் பகுதியில் இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரி வித்திருந்தார். இது தொடர் பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இந்தத் தேர்தலில் எவ் வளவு தூரம் வாக்களிப்பு வீதம் உயர்வடைகின்றதோ அவ் வளவு தூரம் நீங்கள் விரும் புகின்ற, தேசத்திற்கும், மக்க ளுக்கும் நன்மை செய்யக் கூடிய வேட்பாளர்களை பரா ளுமன்றில் பிரதிநிதிகளாக அனுப்ப முடியும்.

தமிழர்களுடைய அரசி யல் தீர்வு, மக்களின் ஆக்கிர மிக்கப்பட்ட நில மீட்பு, காணா மல் போனோர் பிரச்சினை

க்குத் தீர்வு, அரசியல் கைதி களின் விடுதலை போன்ற பல வாக்குறுதிகளைத் தந்த னர். ஆனால் இந்த வாக்கு றுதி களை நிறைவேற்ற அவர் கள் முயற்சிக்கவில்லை.

முக்கியமாக யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் எங்க ளுடைய மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் ஐ.நா. சபையில் நிலைமாறுகால நீதிக்கான தீர்மானம் நிறைவேற்றப் பட் டது. அந்தத் தீர்மானத்தை நடை முறைப்படுத்த இவர்கள் முயற்சி செய்திருக்க வேண் டும்.

அதைச் சரியாக கையாண் டிருந்தால் நிச்சய மாக எங்க ளுக்கு ஓரளவு நிலைமாறு கால நீதி கிடைத்திருக்கும். குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு கிடைக்க வேண் டிய நீதி கிடைத்திருக்கும்.

யுத்தத்தில் இனப்படு கொலை புரிந்தவர்களுக்கு தண்டனை கிடைத்திருக்கும். ஆனால் அதற்கான எந்த முயற் சியும் எடுக்காதது மட்டுமல் லாமல் அரசாங்கத்துடன் இணைந்து அரசாங்கத்திற்கு கால அவ காசத்தையும் பெற்றுக் கொடுத் தனர். எல் லா வற் றுக் கும் மேலாக கடந்த ஆட்சிக்காலத் தில் ரணில் அரசாங்கத்தைக் காப்பாற்ற பல தடவைகள் துணை நின்றார்கள். பேரம் பேசுதல் ஊடாக மக்களின் கையகப்படுத்தப்பட்ட காணி களை விடுவித்திருக்கலாம்; அரசியல் கைதிகளை விடு வித்திருக்கலாம்; காணாமல் போனோருக்கு ஏதோவொரு தீர்வு கண்டிருக்கலாம்.

ஆனால் இவை எவற்றை யும் செய்யவில்லை. பேரம் பேசினார்கள். மக்களுக்காக பேரம் பேசவில்லை. தங்க ளுக்காகப் பேரம் பேசினார் கள். தங்கள் பதவிக்காகவும், பணத்திற்காகவும் பேரம் பேசினார்கள். இதுதான் நட ந்த உண்மை. நாங்கள் பத்து வரு டங்கள் தமிழ்த் தேசியக் கூட் டமைப்புக்கு கொடுத்த வாக்குகள் எல்லாம் வீணா கிப் போனது மாத்திரமல்லா மல் பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கு பதிலாக மேலும் மேலும் பிரச் சனைகள் அதிகரித்துள் ளன.

குடாநாட்டில் முக்கிய சீமெ ந்து தொழிற்சாலையாக இரு ந்து மூடிய காங்கேசன்துறை சீமெ ந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற் சாலை ஆகியவற்றை மீளத் திறப்பதற்கான முயற்சியை எடுத்திருக்கலாம். உப்பளத தைக் கூட சரியாக இயங்க வைக்க முடிய வில்லை.

புதிதாக தொழிற்சாலை கள் தொடங்கவில்லை என் பதற்கு மேலாக ஏற்கனவே இருந்த தொழிற்சாலை களைக் கூட மீளத்திறக்க எத்தணிக்கவில்லை. அவர் கள் மக்கள் நலன் சார்ந்து சிந்திக்க வில்லை. தமிழர் விரோதச் செயற் பாடுகளில் இறங்கியதால் தான் நீதியரசர் தலைமையில் புதிய கட்சி ஆரம்பமானது.

தமிழர்களுக்கு நீதியான சரியான பாதையை தமிழ் மக் கள் தேசியக் கூட்டணி ஏற்ப டுத்திக் கொடுக்கும் என மேலும் அவர் மேலும் தெரி வித்தார். (2-30)

உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படும் மகிந்த தேசப்பிரிய

(முல்லைத்தீவு)

இலங்கையில் மீண்டும் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று இரண்டா வது அலை என்று கூறப்பட் டாலும் அதனை சுகாதார தரப்பினர் ஏற்றுக்கொள்ளவில் லை.

இந்த மீள் தொற்று முதலா வது கொரோனா அலையின் தாக்கம் என்று அவர்கள் கூறு கின்றனர்.

எனவே குறித்த காலப் பகுதிக்குள் தேர்தலை நடத்தி முடிக்க தேர்தல்கள் ஆணைக் குழு நடவடிக்கையை எடுத்து வருகிறது என்று ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுக்கு சென் றிருந்தபோது அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

முன்னதாக முல்லைத் தீவில் தேர்தல்கள் ஆணைக் குழு வின் தலைவர் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளு டன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதன்போது சுயாதீன மான தேர்தல் ஒன்றை முன் னெடுப்பது தொடர்பில் கருத் தாடல்கள் இடம் பெற்றி ருந்தமை குறிப்பிடத்தக் கது. (மு-03)



ஆதார வைத்தியசாலை
பருத்தித்துறையின்
நன்கொடையாளர் தினம் 15.07.2020

துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எமது பிரதேசத்தின் கழகங்கள், சனசமூக நிலையங்கள், நிறுவனங்கள் மற்றும் நலன்விரும்பிகள் தாமாகவே முன்வந்து தம்மால் சேகரிக்கப்பட்ட நிதியுதவியினை அன்றைய தினம் வழங்குவார்கள்.

இடம்: ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை
காலம்: 15.07.2020, மாலை 3.00 மணி

நேரடியாக வருகைதர முடியாதவர்கள் எமது வங்கிக் கணக்கான கொமர்ஷல் வங்கி, நெல்லியடிக் கிளையின் 8007648515 இல் வைப்பிடலாம்

அன்றைய தினம் நன்கொடையாளர்கள் கௌரவிக்கப்படுவார்கள்

மேலதிக தொடர்புகளுக்கு:
முகாமைத்துவ நிறைவேற்றுக் குழு, ஆதாரவைத்தியசாலை,
பருத்தித்துறை.
021 226 3262, 0773754368

(C-9896)

பிரபாகரன் பயங்கரவாதி அல்ல

நளின் ஹேவகே தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என எந்த நீதிமன்றமும் குற்றம் சுமத்தவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தென்மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் கூட்டணியின் காலி வேட்பாளருமான நளின் ஹேவகே திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் நேர்காணலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என எந்த நீதிமன்றத்திலும் நிரூபிக்கப்படவில்லை என

சுட்டிக்காட்டியதுடன் இதே வேளை ராஜபக்ஷவினர் திருடர்கள் இல்லை எனக் கூறுவார்கள் எனில், பிரபாகரனும் பயங்கரவாதியல்ல எனவும் நளின் ஹேவகே உறுதிபடத் தெரிவித்தார். (ஜ-4)

மக்கள் அச்சமடைய தேவையில்லை

கிளி.அரச அதிபர்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் ஊடக சந்திப் பொன்று நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

அதன்போது தபால்மூல வாக்கெடுப்புக்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்பதுடன், முறையான சுகாதார முறைகளை மக்கள் பின்பற்ற வேண்டும் என்ற விடயத்தினையும் அவர் குறிப்பிட்டிருந்தார். (4-5-100)

திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைத் திறப்பு விழா நாளை மறுதினம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நல்லூரில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயகுமரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பா.செந்தில்நந்தனன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வைத்திய நிபுணர் ச.குகதாசன் தம்பதியினர் ஆகியோர் கலந்துகொள்வர். (5-8)

கொரோனா வைரஸ் குறித்த தரவுகளை அரசாங்கம் மறைக்கிறது

கிரியெல்ல குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பான தரவுகளை அரசாங்கம் மறைத்து வருவதாக ஜக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டினார்.

கண்டியில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், தேர்தலில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக கொரோனா வைரஸ் நிலைமை தொடர்பான உண்மையை மக்களுக்கு வெளிப் படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

ஜூலை 13, 14 முதல் 15 ஆம் திகதி முன்னெடுக்கவிருந்த பொதுத்தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதாக பொதுஜன பெரமுன அறிவித்துள்ளபோதும் இந்த முடிவின் பின்னணியில் உள்ள உண்மையை அவர்கள் சுட்டிக்காட்டவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

எனவே பொதுத்தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நிறுத்தியமைக்கான உண்மையான காரணத்தினை இந்த அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் கொரோனா வைரஸ் தாக்கத்தின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் கூறியிருந்தாலும், அரசாங்கத்தினால் அறிவிக்கப்படும் தற்போதைய தரவு தொடர்பான உண்மைத்தன்மை தொடர்பாக கேள்வியெழுந்துள்ளது என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார். (ஜ-4)

இரண்டாவது அலையை முறியடிப்பதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைக்க வேண்டும்

யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழில் இரண்டாவது கொரோனா அலையை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு அனைத்து பொதுமக்களும் சுகாதார திணைக்களத்தினருக்கு ஒத்துழைக்க வேண்டுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது கொரோனா அபாயம் மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண குடாநாட்டில் ஆரம்பத்தில் 16 பேர் தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் தற்போது 14 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூன்று குடும்பம் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்துக்குச் சென்று வந்தவர்கள் என்ற அடிப்படையிலும், மற்றும் ஒரு குடும்பம் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து வந்தவரின் குடும்பம் என்ற அடிப்படையிலும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மொத்தமாக நான்கு குடும்பங்களை சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்றினை தடுக்கும் செயற்பாடானது சுகாதார திணைக்களம் ஏனைய திணைக்களங்கள் மற்றும் பொதுமக்களுடைய செயற்பாட்டின் மூலமே யாழில் கொரோனாவை கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றோம் தற்பொழுது இது சமூகத் தொற்றாக உருவாக்கூடிய அபாயம் காணப்படுவதாக உணரப்படுகின்றது.

இந்தக்கட்டத்தில் இரண்டாவது அலையாக அதாவது முன்னரோடு ஒப்பிடும்போது நாளாந்தம் அறிக்கையிடப்படுகின்ற புள்ளி விபரங்களைப் பார்க்கும் போது நோயாளர்களின் எண்ணிக்கை சற்று கூடுதலாகவே காணப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து பொதுமக்களும் மிகவும் விழிப்பாக இருந்து இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சுகாதாரப் பிரிவினரின் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அநாவசியமாக போக்குவரத்தில் ஈடுபடாது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

அதேநேரத்தில் இன்னுமொரு அபாயம் யாழ்ப்பாண மாவட்டத்திலே காணப்படுகின்றது. தற்போது இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக யாழ். குடாநாட்டுக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாக இருந்தால் இவ்வாறு சட்டவிரோதமாக வருபவர்களை தடுக்க வேண்டும். அதாவது உங்களுடைய உறவினர்களோ அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களோ இவ்வாறான விடயங்களை அறிந்திருந்தால் அது தொடர்பில் அருகில் உள்ள கிராமசேவையாளர் அல்லது பொலிஸார் அல்லது அதற்குரிய அதிகாரிகளுக்கு உடனடியாக தெரியப்படுத்துங்கள்.

எனவே இந்த இரண்டாவது அலையை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு அனைத்து பொதுமக்களும் சுகாதார திணைக்களத்தினருக்கு ஒத்துழைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். (4-5)

திருமுறைகள் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான கார்த்திகைத் திருவிழா வாகிய இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை முதல் தினமும் மாலை 4 மணி முதல் 5 மணிவரை பன்னிரு திருமுறைகள் பாராயணம் உரையுடன் இடம் பெறும். (5)

124 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 124 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள வருகின்றனர். (4-5)

கரவெட்டி மத்தியஸ்த சபை ஞாயிறு முதல் நடைபெறும்

(யாழப்பாணம்)

கொரோனா காரணமாக தற்காலிகமாக இயங்காதிருந்த கரவெட்டி மத்தியஸ்த சபை எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் இயங்கவுள்ளது. நீதிமன்றத்தினாலும், பொலிஸ் நிலையத்தினாலும் முன்வைக்கப்படும் பிணக்குகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

அதி முக்கியமான பிணக்குதாரர்கள் மாத்திரமே சமுகமளிக்க வேண்டும். பிணக்கில் பெயர் குறிப்பிடப்படாதவர்கள், மற்றும் சுகயீனத்திற்கான அறிகுறிகள்உள்ளவர்களும்வருகை தருவதை தவிர்த்துக் கொள்ளவும். வருகை தருவோர் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு மத்தியஸ்த சபைத் தவிசாளர் சி. நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (5)

வாகன இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட போக்குவரத்து திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல்,யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்டசெயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.இதற்கமைய,புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம்,தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். மாவட்ட போக்குவரத்துத் திணைக்கள பிரதி ஆணையாளர் ய. பரந்தாமன் அறிவித்துள்ளார். (5)

தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருவருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரி சோதனையில் முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தை சேர்ந்த பாதுகாப்பு படையினர் இருவருக்குகொரோனாதொற்று உறுதிசெய்யப்பட்டது.

125 பேருக்கு பரிசோதனைகள் யாழ். போதனா வைத்திய சாலை மற்றும் மருத்துவ பீட ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பரிசோதனையில் பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-8)



அரச உத்தியோகத்தர்களுக்கான தபால் மூல வாக்களப்பு நேற்றைய தினம் 2 ஆவது நாளாக இடம் பெற்றது. நேற்று யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பை படங்களில் காணலாம்.

18 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 18கிலோ கஞ்சாவுடன் இருவர் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட உதவி மதுவரி ஆணையாளரின் வழிகாட்டுதலில் சாவகச்சேரி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி இந்திக்க பிரியசாந்த தலைமையிலான குழுவினர் இக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மோட்டார் சைக்கிளில் 9 பொதிகளில் 18 கிலோ கஞ்சாவை கொண்டு சென்ற போதே இக் கைது நடவடிக்கை இடம் பெற்றது.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்து வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். (4-5-30)

சடலத்தைப் பொறுப்பேற்கவும் வல்வெட்டி பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலையில் உயிரிழந்த வயோதிபரின் சடலத்தினை உறவினர்கள் யாராவது இருந்தால் அடையாளங்காட்டி பெற்றுக் கொள்ளுமாறு வல்வெட்டித்துறை பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வரணிப் பகுதியைச் சேர்ந்தவராக கூறப்படும் விநாசிதேவராசா (வயது-62) என்பவர், இம்மாதம் மூன்றாம் திகதி ஊறணிவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் கையில் பச்சை குத்தப்பட்டுள்ளது.

எனவே இவரை தெரிந்தவர்கள் வல்வெட்டித்துறை பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு வல்வெட்டித்துறை பொலிஸார் அறிவித்துள்ளனர். (5)

ஸ்ரீஜயவர்த்தனபுர

பல்கலைக்கழக மாணவனுக்கு கொரோனா இறுதியாண்டுப் பரீட்சைகள் பிற்போடல்

(கொழும்பு)

அநுராதபுரம்-ராஜாங்கனை பிரதேசத்தில் முகாமைத்துவ பீட இறுதியாண்டுப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவர் ஒருவர் உட்பட அவரது குடும்பத்தினர் கொரோனாத்தொற்றுக்குள்ளாகியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களுக்கு இடம்பெறவிருந்த பரீட்சையினை பிற்போட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஜ-4)

பேருந்துக்கட்டணம் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்துள்ள நிலையில் பேருந்து பயணத்தில் சமூக இடைவெளி திரும்பவும் கடைப்பிடிக்க அறிவித்தால் பேருந்து கட்டணம் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பேருந்து பயணிகள் பலரும் தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்த சென்று விட்டதாக குறிப்பிட்ட அவர் பேருந்து சேவை நட்டத்தை எதிர்கொள்ள அனுமதிக்க முடியாது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். (ஜ-4)

பகிரங்க ஏல விற்பனை

பாவனை குறைவடைந்தும் பாவனையற்றும் காணப்படும் கீழ்வரும் பொருட்கள் 2020.07.22 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கழக அலுவலகத்தில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. பொருட்களை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

நிழற் பிரதி இயந்திரம், பிறிண்டர், P,C ஏனையவை

தொடர்புகளுக்கு:- 0212211437, 0212211775, 0770316111.

முகாமைக் குழுவினர், காரை மத்தி மேம்பாட்டுக் கழகம்,
முதன்மைச்சாலை, ஆலடி, காரைநகர்.

(C-9888)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: 16 ½ செவ் 10 இல்
உயரம்: 168 cm
தகைமை/தொழில்: பட்டதாரி சுகாதாரப் பரிசோதகர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10961

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: செவ் 9 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த நிரந்தர சொந்தத் தொழில் செய்கின்றார்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10963

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த குழாய் பொருத்துநர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண். வெளிநாடு மட்டும்
தொ.இ: B/10964

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 41 செவ் 10 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த முகாமையாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10965

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Sc Economics & Finance, Accountant in Australia.
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/8423

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 41 ¾ செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/8437

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: 66 ¼ செவ் 8 இல்
உயரம்: 153cm
தகைமை/தொழில்: HND in Civil Engineering திட்டமிடல் பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/8440

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 12 சூரி,செவ் 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Diploma in Pre.School Private work
எதிர்பார்ப்பு:. நிரந்தர வேலை
தொ.இ: G/8445

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி
தேர்தல் மாவட்ட வேட்பாளர்கள்



X



X

தமிழ் மக்களுக்கான
நீதியின் காவலன்



நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
(ஓய்வுநிலை உச்ச நீதிமன்ற நீதியரசர் மற்றும் முன்னாள் முதலமைச்சர் வடமாகாணம்)
6

1

திருமதி அனந்தி சசிதரன்
(முன்னாள் மகளிர் விவகார அமைச்சர், வடமாகாண சபை)

2

திரு.கந்தையா அருந்தவபாலன்
(ஓய்வுநிலை அதிபர்)

3

திரு.ஆறுமுகம் கந்தையா பிறேமச்சந்திரன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

4

திரு.கந்தையா இரத்தினகுமார்
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

5

திரு.கனகலிங்கம் சிவாஜிலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

7

திரு.நல்லதம்பி சிறீகாந்தா
(சிரேஷ்ட சட்டத்தரணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

8

திருமதி. மீரா அருள்நேசன்
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

9

திரு.சிங்கபாகு சிவகுமார்
(சமூக சேவகர்)

10

திரு.தவச்செல்வம் சிற்பரன்
(கட்டிடக் கலைஞர்)

(C-0456)

வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

நாகதாளிப்பழமும் நோய் எதிர்பாற்றலும்

Botanical Name:
Opuntia dillenii
Family- Cactacea
Eng-Prickly pear

பற்றையாகவும், அடர்த்தியாகவும் கிளைவிட்டு வளரக் கூடிய புதர் செடி. வறள்நிலத் தாவரம். இலைத்தொழிற்தண்டான Cladodes வகையினது.ஒவ்வொரு தண்டும் 17-22 செ.மீ நீளமும், 7.5-13 செ.மீ நீளமும்,7.5-13 செ.மீ அகலமும் கொண்டது.

இலை பச்சை கலந்த சாம்பல் நிறமானது. நீண்ட முட்கள் தண்டுகளில் காணப்படும். ஒழுங்கான, இருபாலான பூக்கள், பெரியவை, பிரகாசமான மஞ்சள் நிறம் கொண்டவை. சிவப்பு கலந்த ஊதா நிறப் பழங்களைக் கொண்டது.

6செ.மீ நீளமான, 3 செ.மீ அகலமான பழங்களைக் கொண்டது. வருடம் முழுவதும் பெரும்பாலும் பூக்களைக் காணலாம், வெப்பமான காலங்களில் கூடுதலாக பூக்கக்கூடியது. ஆனி, ஆடி மாதங்களில் கூடுதலாக பழங்களை சேகரிக்கலாம்.

மெக்ஸிக்கோவை தாயகமாகக் கொண்டாலும் இலங்கை, இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இயற்கையாகவே வளரக் கூடியது. யாழ்ப்பாணத்தில் வறண்ட பிரதேசங்களிலும் கடற்கரையை அண்டிய பிரதேசங்களிலும் இதன் பரம்பல் அதிகமாகும்.

இதனுடைய பழங்கள் மிகவும் குளிர்ச்சியைத் (refrigerant) தரக் கூடியது. அதிகளவு உயிர்ச்சத்துக்கள்,கனிமங்களை உள்ளடக்கியது.

இதன் பழங்களில் வெளியிலும் உள் பகுதியில் நட்சத்திர வடிவ தொண்டை முள்ளும் காணப்படும். இப்பழங்களை சேகரித்து சுத்தமான கல்லில் பழங்களின் வெளிப்பகுதியை மென்மையாக உரசும் போது வெளிப்பகுதியிலுள்ள முட்கள் நீங்கி விடும்.

பழங்கள் மிகவும் சுவையானவை. உட் பகுதியைப் பிளந்தால் சதைப் பகுதிக்குள் நட்சத்திர வடிவ முள் காணப்படும். அதை நீக்கிய பின்பு பழங்களை சாப்பிடக் கூடியதாக இருக்கும்.

இருதயத்திற்கு மிகுந்த பலத்தைக் கொடுக்கக் கூடியது. நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கச் செய்யக் கூடியதுமாகும். சித்தர்கள் குறிப்பிடுவது யாதெனில் முட்கள் உள்ள மருத்துவ தாவரங்களில் மருத்துவப் பண்புகள் அதிகமாகக் காணப்படும். அதிலுள்ள சத்துக்களும் அதிகமாகவே இருக்கும்.

இதன் பழச்சாற்றிலிருந்து மணப்பாகு(பானம்), ஜாம், சர்பத் போன்றன தயாரித்து பயன்படுத்தலாம்.

நீரிழிவு தொற்றா நோய்களின் தாக்கம், புற்று நோயின் தாக்கம் உள்ளவர்கள் இதனை கிடைக்கும் போது தினமும் சாப்பிடலாம். சப்பாத்திக் கள்ளியின் பழங்களில் மகனீசியம்,பொட்டாசியம் கல்சியம், செப்புச் சத்துக்கள் அதிகமாகக் காணப்படும். இதில் பிளேபனொயிட்டுகள், பொலி பிளேபனொயிட்டுச் சத்துக்கள் காணப்படுகின்றன. இந்தப் பழங்களை தொடர்ந்து சாப்பிட்டு வரும் போது புற்றுநோய்க்கலங்கள் அழிக்கக்கூடியது.

இதற்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. பாதாள மூலிகையாகும். இது வறட்சியான தாவரமாக இருந்தாலும் உள்பகுதியில் நீர்ச்சத்தும், நார்ச்சத்தும் நிறைந்ததாக இருக்கும். பழங்களில் இருக்கும் நார்ச்சத்து செரிமானத்தை சீராக்கி மலத்தை இலகுவாக வெளியேற்றும். தொடர்ந்து சாப்பிட்டுவர இரத்தத்தில் இருக்கும் கெட்ட கொலஸ்ரோலைக் கரைக்கக்கூடியது. பழங்களை சேகரித்து பழத்தினுள் முட்கள், தொண்டை முள், விதைகளை நீக்கிய பின்பு பயன்படுத்த வேண்டும். சதைப் பகுதிக்குள் 2 தொண்டை முட்கள் இருக்கும்.இரண்டையும் நீக்கிவிட வேண்டும்.மிகவும் இனிப்பானது. பெரும்பாலும் இந்தப் பானத்தை தயாரித்து தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டுவர நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கும்.

கர்ப்பப்பையில் இருக்கும் நீர்க்கட்டிகளை கரைக்கக்கூடியது, பெரும்பாலும் பெண் மலட்டுக்கு சிறந்த பழமாகும். 250 கிராம் பழங்களிற்கு 200 மில்லி நீர் கலந்து மிக்சியில் அடித்து சப்பாத்திப் பழ யூஸ் ஆக தயாரித்துப் பருகலாம்.

கர்ப்பம் தரிக்க கள்ளிப் பழங்களை 3 மாதங்கள் தொடர்ந்து சாப்பிட வேண்டும்.

விசங்களின் தன்மையை நீக்கக்கூடியது.பொதுவாக நச்சு மூலிகைகளின் விடயங்களை நீக்க நாகதாளி தண்டை முட்கள் நீக்கி உட்பகுதியை எடுத்து நீரில் நன்கு கழுவி, ஒரு சிறிய துண்டிற்கு மிளகுத்தூள் தூவி நச்சுத் தன்மை நீங்கும் வரை சாப்பிடலாம்.

நீரை சுத்திகரிப்பதற்கு சப்பாத்திக் கள்ளி தண்டுகளை முட்கள் நீக்கி நீரில் போட்டு வைக்க நீர் தூய்மையாகும்.

பொதுவாக இச் செடிகள் பரவலாகக் காணப்படும் இடத்து பாம்புகள் நடமாட்டம் கூடுதலாகவும் இருக்கும். எனவே இச் செடியின் பகுதிகளை பறிக்கும் போது அவதானமாக இருக்க வேண்டும். நாகதாளியின் வேர்களை சேகரித்து தணலில் வாட்டி சாறு பிழிந்து மிளகு,தேன் கலந்து கொடுக்க விசம் நீங்கும்.

குடற் புண்ணிற்கு இதன் தண்டின் முட்களை நீக்கி, தோலைச் சீவி உள்ளிருக்கும் சதைப் பகுதியை சேகரித்து கழுவி தேன் கலந்து கொடுக்க குடற் புண்கள் ஆறும்.

ஆமணக்கு எண்ணெயை சூடாக்கி முட்கள் நீக்கிய தண்டுப் பகுதியை சிறு துண்டுகளாக வெட்டி அதில் போட்டு சுத்தமான பருத்தித்துணியில் வெந்தும் போட்டு முடிந்து தாங்கக்கூடிய சூட்டில் வாத வலிகளுக்கு ஒற்றடம் கொடுக்க வேண்டும்.

நாகதாளி தண்டுக்களை சேகரித்து முட்களை நீக்கி தோலைச் சீவி தண்டுப் பகுதிகளை சிறுசிறு துண்டுகளாக்கி நன்கு நீரில் கழுவி வெங்காயம், செத்தல், கடுகு, பெருஞ்சீரகம், வெந்தயம், கறிவேப் பிலை போட்டு சிறிது எண்ணெயில் வதக்கி நாகதாளித்துண்டுகளையும் போட்டு வதக்கி தேங்காய்ப்பால், தேவை யான அளவு உப்பு, அளவான மிளகாய்த்தூள் சேர்த்து சமைத்து சாதத்துடன் சாப்பிட்டு வர உடல் உஷ்ணம் தணியும்.

உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும். எமது பிரதேச சீதோஷ்ணத்திற்கு தகுந்த உணவாகவும் அமைந்து விடுகின்றது. பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோயிற்கும் சிறந்ததாகும்.

இதன் தனித்தண்டின் சாற்றை முகப் பருவிற்கும் தடவலாம்.

ஆண்மலடாகிலும்,பெண் மலடாகிலும் சப்பாத்திக் கள்ளி பழங்களை சாப்பிட்டு வர விந்தணுக்களின் எண்ணிக்கையை கூட்டும் என ஆய்வுகளும் எடுத்தியம்புகின்றன. கரு முட்டை வளர்ச்சியும் சீராகும். யாழ். மாவட்ட த்தில் பரவலாக புதர்க்காட்டுப் பகுதிகளும் இப் பழங்கள் தாராளமாக கிடைக்கக் கூடியதாகவும் மிகவும் சுவையாகவும் இருக்கும்.

உயிர்ச்சத்து B, C இதன் பழங்களில் காணப்படுவதால் நோய் எதிர்ப்பாற்றலை மேலும் அதிகரிக்கக் கூடியது.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தேர்தல் கடமைகளில் பொலிஸாரே; இராணுவத்திற்கு இடமில்லை

யாழில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தேர்தல் கடமைகளில் ஒருபோதும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். பொலிஸார் மாத்திரமே தேர்தல் கடமையில் ஈடுபடுவார்கள் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய யாழில் தெரிவித்துள்ளார்.

இரு நாள் விஜயமாக வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய நேற்று யாழ்.மாவட்ட செயலகத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டு உதவித் தேர்தல் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும் போது வடக்கில் சில தேர்தல் விதிமுறை மீறல்கள் அதிகமாக இடம் பெறுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அதாவது வீதிகளில் வேட்பாளர்களின் இலக்கங்கள் மற்றும் சின்னங்கள் எழுதப்படுவது அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இவை நிறுத்தப்பட வேண்டியது.

அத்தோடு இங்கே அரசாங்க நிதியில் அமைக்கப்படும் வீதிகள் சில வேட்பாளர்களினால் திறப்பு விழாக்கள் செய்யப்பட்டு திறக்கப்படுகின்றன. அதனை உடனடியாக நிறுத்தும்படி நான் உத்தரவு பிறப்பித்திருக்கின்றேன். அத்தோடு தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வாக்களிப்பது தொடர்பாக நாம் ஆணைக்குழுவில் ஆராய்ந்து வருகின்றோம். அது தொடர்பில் விரைவில் அந்த அறிவித்தல் வரும்.

அதேபோல வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளவர்கள் தேர்தல் தினத்தன்று மாலை 4 தொடக்கம் 5 மணி வரை வாக்களிப்பு நிலையம் சென்று வாக்களிப்பினை மேற்கொள்ள முடியும்.

தேர்தல் கடமைகளில் பொலிஸார் மாத்திரமே கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். இராணுவத்தினர் எக்காரணத்திற்காகவும் கடமையில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். அதாவது எமக்கு ஒரே ஒரு விடயத்திற்கு தான் இராணுவத்தினர் உதவி தேவைப்படுகின்றது.

அதாவது தீவுப் பகுதிகளில் இருந்து விரைவாக வாக்குப் பெட்டிகளை வாக்கு சேகரிப்பு நிலையத்திற்கு எடுத்து வருவதற்கு விமானப்படை மற்றும் கடற்படையினரின் உதவி தேவையாக உள்ளது.

எனவே வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்திற்கு எடுத்துசெல்லும் பணியில் மட்டும் இராணுவத்தினர் பயன்படுத்தப்படுவார்கள். தேர்தல் கடமைகள்அனைத்திலும்பொலிஸார் மாத்திரமே கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

அத்தோடு தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் ஒரு வரை கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு மாத்திரமே உள்ளது. அதனை வேறு எவரும் மேற்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-8-101)



1983 இற்குப் பின் நடந்தது இனப்படுகொலையே சர்வதேசத்திற்கு உரத்துக் கூறியவர் அமிர்தலிங்கம்

(கொழும்பு)

எங்களுடைய பிரச்சினைகளை வெளிக்காட்டி 1983ற்கு பிறகு நடைபெற்றது இனப்படுகொலை தான் என்று சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறியவர் அமிர்தலிங்கம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான அமிர்தலிங்கத்தின் 31 ஆவது ஆண்டு நினைவேந்தல் வலி.மேற்கு பிரதேச சபை யில் நடைபெற்றது. அதில் பங்கேற்று கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றிலே, தந்தை செல்வாவுடன் தமிழரசுக் கட்சியை வழி நடத்துவதிலும் செயற்படுத்துவதிலும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அரும்பாடுபட்டவர் அமிர்தலிங்கம்.தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி வரலாற்றுப் புகழ் மிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தன்னுடைய சொந்தக் கிராமமான பண்ணாகம் மண்ணில் உள்ள மெய்கண்டான் வித்தியாலயத்திலே நடத்தினார்.

1977ஆம் ஆண்டு முதல் தமிழ் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தமிழ் இனத்தினுடைய விடுதலைப் போராட்ட இயக்கங்களினுடைய தலைவர்களான தங்கத்துரை குட்டிமணி, பிரபாகரன், உமா மகேஸ்வரன் ஆகியோருடன் நேரடியாகத் தொடர்புகளைப் பேணியவர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட தளபதி குட்டிமணியை வட்டுக்கோட்டைத் தொகுதி எம்.பியாக நியமித்து செயற்பட்டவர். ஆனால் இன்று இருப்பவர்கள் ஆயுதப்போராட்டத்தினைக் கொச்சைப்படுத்துகின்றனர்.

தலைவர் பிரபாகரன் 1982 காலப்பகுதிக்கு முன்னர் பாண்டி பசாரிலே கைது செய்யப்பட்ட பொழுது அமரர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு கடிதம் கொடுத்து அவர் நாடு கடத்தப்படாமல் தடுப்பதில் உழைத்தவர்.

இதே தினத்தில் படுகொலை செய்யப்பட்ட அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் நினைவு தினத்தில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் கூறினார். (2-104)

உள்நாட்டு வருவாய் திணைக்கள ஊழியர்களுக்கு கொடுப்பனவை வழங்குமாறு பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

உள்நாட்டு வருவாய் திணைக்களத்தின் ஊழியர்களுக்காக வருமான இலக்கை முழுமையாக்குவதற்காக வழங்கப்படும்கொடுப்பனவை கூடிய விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அந்த திணைக்களத்தின் தொழிற்சங்கம் மற்றும் பிரதமருக்கு இடையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவுக்கு பிரதமர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் வாரத்திற்குள் உள்நாட்டு வருவாய் இலக்கை முழுமைப்படுத்துவதற்காக திணைக்களத்தின் ஊழியர்களுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தங்கள் சேவையை நிறைவேற்றுவதற்கு தேசிய வருவாய் திணைக்கள அதிகாரிகள் மேற்கொள்ளும் அர்ப்பணிப்பை, அரசாங்கம் என்ற ரீதியில் மதிப்பளிப்பதாக பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார். (ஜ-4)

1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்

05

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

ஆனால் அரசாங்கம் அவசர கால சட்ட விதிகளைப் பயன்படுத்தி இடைத் தேர்தல் நடத்தாமல் காலத்தை இழுத் தடித்தது.

காலவரையறையின்றி இழுத்தடிப் பதைக் கண்டித்தும் இடைத்தேர்தலை உடனடியாக நடத்துவது குறித்த கோரி க்கையை எதிர்க்கட்சிகள் இணைந்து முன்வைத்தன. "அரசியலமைப்பின் தேர்தல் சட்டங்களின்படி காங்கேசன் துறை இடைத்தேர்தலை அரசாங்கம் நடத்தாமல் இழுத்தடித்து வருவது மக்களின் அடிப்படை மீறலும், ஜன நாயக உரிமைகளை மீறுவதுமாகும். இதற்கு மேலும் இழுத்தடிக்காமல் இடைத்தேர்தலை நடத்தும்படி அரசாங் கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்" என்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, டபிள்யூ தஹ நாயக்க, பரிஸ் குணசேகர, எம்.தென் னக்கோன், வீ.என்.நவரத்னம், ஏ. தர்மலிங்கம், வீ.ஆனந்தசங்கரி ஆகி யோர் கோரியிருந்தனர்.

08.08.1973 இல் இது குறித்து தேசிய அரசுப் பேரவையில் (1972 அரசியல் யாப்பின்படி பாராளுமன்றம் அப்படித்தான் பெயர் மாற்றம் கண்டது.) ஒரு விவாதம் நடந்தது. இந்த விவா தத்தில் இடைத்தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான காரணத்தை முன் வைத்து நீண்டநேரம் பேசியவர் அன் றைய மின்னேரியா தொகுதி உறுப் பினரும் தொழில், திட்டமிடல் அமைச்ச ருமான ரத்ன தேசப்பிரிய.

வடக்கில் தமிழரசுக் கட்சியினர் தொடர்ச்சியாக கிளர்ச்சிகளை ஏற்படுத் திக்கொண்டே செல்வதால், வாக்காளர் கள் சுதந்திரமாக வாக்குகளைப் பயன் படுத்த வாய்ப்பு இல்லை என்று அவர் வாதிட்டார்.

மேலும் ஜனநாயகத்துக்கு விரோத மாக ஆயுதங்களைத் திரட்டியும், துண் டுப்பிரசுரங்களை விநியோகித்தும் வடக்கின் தலைவர்கள் அரசாங்கத் துக்கு எதிராக சதி செய்யும் நிலையில் காங்கேசன்துறையில் இடைத்தேர்தல் நடத்த எப்படி முடியும் என்று அவர் குற்றம் சாட்டினார்.

"செல்வநாயகம் அரசியலமைப்பை எதிர்த்துத்தான் இராஜினாமா செய்தி ருக்கிறார். அதிலிருந்து அவர் ஒரு ஜனநாயக விரோதி என்று தெரிகிறது. இராணுவத்தையும், பொலிஸாரையும் ஈடுபடுத்தி இடைத்தேர்தலை எம்மால் நடத்த முடியும். ஆனால் அதை செய்யப் போவதில்லை" என்று மிரட்டினார்.

20.04.1974 விசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்ட அவசரகால சட்ட விதிகளின் மீதான விவாதத்தில் உரையாற்றிய வீ.தர்மலி ங்கம் "இந்த சட்டத்தின் மூலம் தெற்கில் உள்ளவர்களுக்குத் தான் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டிருக்கிறது. வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அதற்கு முன்னரே ஜனநாயக உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டுவிட்டன" என்றார். மேலும், கூட்டங்கள் நடத்துவதை சட்ட ரீதியில் நேரடியாக தடுக்காவிட்டாலும் பல நிபந்தனைகளின் கீழ் தான் அங்கு கூட்டங்கள் நடத்தமுடிகிறது என்றார் அவர். அந்த விவாதத்தில் பங்குகொண்ட பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க வடக்கில் இடம்பெற்று வரும் நிலைமை களை அடுக்கிச் சொல்லிவிட்டு குண் டெறிவது, துப்பாக்கிச்சூடு நிகழ்த்துவது போன்றவற்றை நிறுத்தினால் இடைத் தேர்தலை நடத்த முடியும் என்று கார ணம் கற்பித்தார்.

ஆனால் பின்னர் 1974 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தை திறந்து வைப்பதற்காக வந்திருந்தவேளை, அங்கு உரையாற்றிய பிரதமர் சிறிமா கூடிய விரைவில் காங்கேசன்துறை இடைத் தேர்தலை நடத்தப்போவதாக அறிவித் தார். அதுவரை காலம் காங்கேசன் துறை தொகுதி மக்கள் தமது பிரநிதி யைத் தெரிவு செய்யும் உரிமையை இல்லாமல் செய்யும் நோக்கத்தினால் நடத்தாமல் இருந்ததாக கருத வேண் டாம் என்றும், அமைதியான தேர்தலை நடத்துவதை உறுதி செய்வதற்காகத் தான் என்றும் கூறினார். உங்களில் உள்ள இனவாதிகளால் மேற்கொள்ளப் படும் சில சம்பவங்களை நிறுத்தியதன் பின்னர் நிச்சயமாக நடத்துவேன் என்று அறிவித்தார்.

02.12.1974 அன்று பிரதமர் காரியா லயத்திலிருந்து ஒரு அறிக்கை வெளி யிடப்பட்டது. அதில் ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாண விஜயத்தின் போது வெளி யிட்ட கருத்துக்களையும் நினைவு கூர்ந் ததுடன், அத்தேர்தலை ஒத்திவைப்ப தற்கு பயன்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்தை புதுப்பிப்பதை நிறுத்திவிட்டு சாதாரண சட்டத்தின் கீழ் அந்த தேர் தலை நடத்தவிருப்பதாக அறிவித்தார். இந்த அறிவிப்பு செய்யப்பட்ட ஒரு மாதத் தில் 07.01.1975 தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சி சார்பாக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (வீடு சின் னம்), இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வீ.பொன்னம்பலம் (விண்மீன் சின்னம்), சுயேட்சையாக எம்.அம்பல வாணர் (கப்பல்) ஆகியோரும் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

சுதந்திர இறையாண்மை உள்ள தமிழ் ஈழ தேசம் என்ற கோரிக்கையை முன்வைத்து, தந்தை செல்வா போட்டி யிட்டார். அடுத்த மாதமே 1975 பெப்ரவரி 6 இல் இடைத்தேர்தல் நடந்தது.

இந்தத் தேர்தல் வெற்றி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வெற்றி யாகவும் அமைந்தது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 25 ஆயிரத்து 927 வாக்குகளைப் பெற்றார். 72.89 வீத வாக்குகள் அவருக்கே கிடைத்திருந்தன. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் செல்வநாயகம் ஆற்றிய உரை முக்கிய த்துவம் வாய்ந்தது.

"இத்தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தம் தீர்ப்பை வழங்கியிருக்கின்றனர் என்றே நான் கருதுகிறேன். தமக்குள்ள இறை மையைப் பிரயோகித்து சுதந்திர தமிழ் ஈழத்தை அமைப்பதே அவர்கள் அளித்த தீர்ப்பு. அதை நான் இந்நாட்டு மக்களுக் கும் உலகுக்கும் பிரகடனப்படுத்துகிறேன். மக்கள் எமக்களித்த இந்த ஆணையை தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்ப டுத்தும் என்று நான் இன்று உறுதியளிக் கிறேன்." என்றார். (தகவல்- இணையம்)

தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 151 இலிருந்து 168 ஆக அதிகரிப்பு

1972 அரசியலமைப்பின் 77ஆம் உறுப்புரைப்படி: அமைக்கப்படும் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கைக்கு இணங்க மக்களால் சர்வஜன வாக்கு ரிமை மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதி நிதிகளை மட்டுமே தேசிய அரசுப் பேரவை கொண்டிருக்கும்.

1974ஆம் ஆண்டில் நோயெல் தித்த வெல தலைமையில் அமைக்கப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவானது தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் எண்ணிக் கையை 168ஆக வரையறை செய்தது.

விஸ்தீரணம் மற்றும் சனத்தொகை அடிப்படையில் மாகாண மட்டத்தில் மொத்தப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம் - 39, மத்திய மாகாணம் - 24, தென் மாகா ணம் - 21, வட மாகாணம் - 14, கீழ் மாகாணம் - 12, வடமேல் மாகாணம் - 19, வட மத்திய மாகாணம் - 10, ஊவா மாகாணம் - 12 மற்றும் சப்ரகமுவ மாகாணம் - 17. மொத்தம் -168.

வட மாகாணத்தில் எல்லை நிர்ண யம்செய்யப்பட்ட தேர்தல் தொகுதிகள் 14. அவை ஊர்காவற்றுறைத் தொகுதி, வட்டுக்கோட்டைத் தொகுதி, காங்கே சன்துறைத் தொகுதி, யாழ்ப்பாணத் தொகுதி, கோப்பாய்த் தொகுதி, பருத்தித் துறைத் தொகுதி, சாவகச்சேரித் தொகுதி, மானிப்பாய் தொகுதி, நல்லூர் தொகுதி, உடுப்பிட்டித் தொகுதி, கிளிநொச்சித் தொகுதி, மன்னார்த் தொகுதி, வவு னியாத் தொகுதி, முல்லைத்தீவு தொகுதி என்பனவாகும். உடுவில் தொகுதி, மானிப்பாய் தொகுதி என பெயர் மாற் றப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றம்

1972 ஆம் ஆண்டில் இலங்கையின் முக்கிய தமிழ்க் கட்சிகளான தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பவை சேர்ந்து தமிழர் கூட்டணி என்னும் கூட்ட மைப்பை உருவாக்கின. மேற்படி கட்சிக ளின் தலைவர்களாக இருந்த எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம் பலம், செள. தொண்டமான் ஆகியோர் கூட் டுத் தலைவர்களாக நியமிக்கப்பட்ட னர்.

1976 இல் இவ்வமைப்பு தமிழர் விடு தலைக் கூட்டணி (ஆங்கிலம்: **Tamil United Liberation Front**) எனப் பெயர் மாற்றம் பெற்றதுடன், வட்டுக் கோட்டையில் நடந்த அதன் மாநாட்டில், "வட்டுக்கோட்டைத் தீர்மானம்" என்று பரவலாக அறியப்படும் தீர்மானத்தையும் நிறைவேற்றியது. இத் தீர்மானம் இலங் கையில் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, சுயநிர் ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திர, இறைமையுள்ள, மதச் சார் பற்ற, சோசலிசத் தமிழீழ நாட்டை மீள்விக்க வேண்டுமெனப் பிரகடனம் செய்தது. 1977 ஆம் ஆண்டில் நடை பெற்ற பொதுத் தேர்தலில், சுதந்திரத் தமிழீழக் கொள்கைக்கு மக்கள் ஆணை கோரிப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும் வெற்றி பெற்று, இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக அமரும் வாய்ப்பைப் பெற்றது. கூட்டணித் தலை வர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் அழுத்தத்தாலும், தமிழ் ஈழத்துக்கு ஆதர வளிப்பதில்லை என நாடாளுமன்ற த்தில் சத்தியப்பிரமாணம் எடுப்பதற் கான ஆறாம் திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கறுப்பு ஜூலை வன்முறைகளில் சிங்கள காடையர்க ளினால் 3 ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரி வித்தும், அனைத்து தமிழர் விடு தலைக் கூட்டணி உறுப்பினர்களும் 1983 முதல் நாடாளுமன்றத்தை ஒன்றி யொதுக்கல் செய்தார்கள்.

மூன்று மாதங்கள் நாடாளு மன் றத்துக்குச் சமுகமளிக்காத நிலையில், 1983 ஒக்டோபர் 22 இல் அவர்கள் அனை வரும் நாடாளுமன்ற இருக்கை களை இழந்தார்கள்.

70 களின் ஆரம்பத்திலிருந்தே சிறு சிறு குழுக்களாக இயங்கிவந்த தீவி ரவாத இளைஞர்கள், படிப்படியாகப் பலம் பெற்றுவந்தார்கள். அதனால் 1983க்குப் பின்னர் தமிழர் அரசியலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் முக்கியத் துவம் குறையத் தொடங்கியது.

தேசிய அரசுப் பேரவை (பாராளுமன்றத்) தேர்தல் - 1977: வட மாகாண 14 தேர்தல் தொகுதிகள்

எட்டாவது பாராளுமன்றத்தேர்த லில் வடமாகாணத்திலிருந்து அட்ட வணை-11இல் தரப்பட்டோர் பாரா ளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட் டனர். வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ரி.திருநா வுக்கரசு 1982 ஓகஸ்ட் 1 இல் மாரடை ப்பால் காலமானார்.

இவரது இடத்திற்கு நீலன் திருச் செல்வம் 1983 மார்ச் 8 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் நிய மிக்கப்பட்டார்.

அனைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் 1983 முதல் நாடாளுமன்றத்தை ஒன்றியொ துக்கல் செய்தார்கள். மூன்று மாதங்கள் நாடாளுமன்றத்துக்குச் சமுகமளிக்காத நிலையில், 1983 ஒக்டோபர் 22 இல் நீலன் திருச்செல்வம் நாடாளுமன்ற இருக்கைகளை இழந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதி வி. தர்மலிங்கம் 1960 முதல் 1977 வரையான அனைத்துத் தேர்தல் களிலும் உடுவில்/மானிப்பாய் தொகுதி யில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் 1985, செப்டெம்பர் 2 இல் படு கொலை செய்யப்பட்டார்.

(தொடரும்....)

கொரோனாத் தொற்று தீவிரம்; சுகாதார நடைமுறைகளில் அதிருப்தி

கிளி.வைத்தியசாலைப் பணிப்பாளர்

(கிளிநொச்சி)

கொரோனாத் தொற்றின் இரண்டாம் அலை தீவிரமடைந்து வரும் நிலையில் கிளிநொச்சி மக்கள், சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து வந்தாலும் அது திருப்தி தரும் வகையில் இல்லை என கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் ஆர்.ராகுலன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்கள் பொது இடங்களில் கூட்டமாக தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கொரோனா தீவிரமடையும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் பாரிய விளைவை ஏற்படுத்தும். கொரோனாத்தொற்றின் அவலநிலையைக் கருத்திற் கொண்டு பொதுமக்கள் சமூக இடைவெளியையும், சுகாதார நடைமுறைகளையும் ஒழுங்காக பின்பற்ற வேண்டும். பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வரும் நிலையில் தான் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும் எனவும் தெரிவித்தார். (8)

கொரோனா அச்சம் காரணமாக தொழில்நுட்ப பீடம் மூடப்பட்டது

(கிளிநொச்சி)

யாழ். பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பகுதிகளும் முடக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவரின் சகோதரன் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் ஒரு இராணுவ வீரர்.

குறித்த இராணுவ வீரருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, கம்பஹாவில் உள்ள சுகாதாரத் திணைக்களத்திலிருந்து கிளிநொச்சி பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாகத் தகவலின் அடிப்படையில் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (4-5)

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் 5/6 இன் I/II ஆம் அரையாண்டிற்கான பரீட்சை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி இறுதி பரீட்சை (குறிகிய கால கற்கை நெறிகளுக்கானது) -2020 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே மீள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர்வரும் 24.07.2020 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைப்பகுதியில் அல்லது தமது துறைத் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறு யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார். (5)

முல்லைத்தீவில் தபால்மூல வாக்களிப்பு

(முல்லைத்தீவு)

நாட்டில் இடம்பெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்புகள் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் நேற்று முன்தினம் தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமானது.

13 ஆம் -17 ஆம் திகதி வரை வாக்களிக்க தவறியவர்கள் எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தங்களுடைய தபால் மூல வாக்களிப்பு மேற்கோள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டு இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கா.காந்தீபன் தெரிவித்தார்.



தேர்தல் தொடர்பிலான முறைப்பாடுகளை மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற முறைப்பாட்டு பிரிவு தொலைபேசி இலக்கம் 021 320 4352 என்ற இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (5)

வடக்கில் கொரோனா பரவலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது நிலவுகின்ற கொரோன பரவல் சூழ் நிலையினைத் தெளிவுபடுத்தவும், வட மாகாணத்தில் உள்ள மக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பற்றியும் வடமாகாண ஆளுநரின் ஆலோசனையின் பிரகாரம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாவன, அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும் அல்லது பிற்போடவும்.

● அவசியமின்றி பொது இடங்களில் ஒன்றுகூடுவதை தவிர்த்துக்கொள்ளவும்.

● அவசியமற்ற பொது நிகழ்வுகள், விளையாட்டுப்போட்டிகள் என்பவற்றை தவிர்த்துக் கொள்ளவும் அல்லது பிற்போடவும்.

● தற்போது நாட்டில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே பொது இடங்களில் அனைவரும் முகக்கவசம் கட்டாயம் அணிந்து கொள்ளவேண்டும். முகக்கவசம் மூக்கு, வாய் என்பவற்றை மூடிக்கொள்ளுமாறு அணிந்திருத்தல் அவசியம்.

● முகக்கவசம் அணியாதவர்கள் அனைவரும் இரண்டு வாரங்களுக்கு கட்டாய தனிமைப்படுத்தல் முகாமிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

● பொது இடங்களில் பொது மக்கள் ஒன்று கூடும்போது 2 பேருக்கு இடையில் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் சமூக இடைவெளி பேணப்பட வேண்டும்.

● எந்த நிறுவனங்களுக்கும் உட்செல்ல முன்னர் சவர்க்காரமிட்டு கைகழுவ வேண்டும். அதேபோன்று வெளியே சென்று வீட்டுக்குத் திரும்பியவுனும் சவர்க்காரமிட்டுகைகழுவ வேண்டும் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஜ-5-8)

மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-திருவணணைநகர் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய தேவி திவ்விய மஹோற்சவம் இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள் உரிய சுகாதார நடைமுறைப்படி சமூக இடைவெளியைப் பின்பற்றி வருகை தருமாறு ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (4-5)

குணமடைந்தோர் 1988

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான 2646 பேரில் மேலும் 07 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் நாட்டில் குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 988 ஆக உயர்ந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது. தற்போது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் 647 பேர் சிகிச்சை பெற்று வரும் அதேநேரம் கொரோனாத் தொற்று சந்தேகத்தின் பேரில் 112 பேர் வைத்திய கண்காணிப்பிலும் உள்ளனர். (ஜ-4)

வேட்பாளரின் சின்னத்துடன் வாக்குச் சாவடிக்கருகில் மோட்டார் சைக்கிள்

விரைந்து அகற்றிய அதிகாரிகள்

(பளிக்கன்குளம்)

நாட்டில் இடம்பெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்புகள் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் நேற்று முதல் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலக வாக்குச் சாவடிக்கு அருகில் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் வேட்பாளர் ஒருவரின் புகைப்படம் மற்றும் சின்னத்துடன் கூடிய ஸ்ரிக்கர் ஒட்டியவாறு மோட்டார் சைக்கிளினை நிறுத்தி வைத்திருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சென்று அந்த விளம்பரத்தை அகற்றி மோட்டார் சைக்கிளினை அங்கிருந்து அகற்றினர்.

அத்தோடு குறித்த வாக்களிப்பு நிலையத்துக்கு முன்பாக கட்சி ஒன்றின் சின்னத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றும் சோதனையிடப்பட்டு வாகனமும் குறித்த இடத்தை விட்டு அகற்றப்பட்டிருந்தது. அத்தோடு குறித்த பகுதியில் சின்னம் பொறிக்கப்பட்ட அட்டைகளும் வீசப்பட்டிருந்த நிலையில் அவற்றையும் அகற்றினர். பின்னர் வாக்களிப்பு சுமுகமாக இடம்பெற்றது. (4-5-281)

பாரதம்

வர்த்தகத்திற்காக வாகா எல்லையை திறக்க பாகிஸ்தான் ஒப்புதல்

(டில்லி)

இந்தியா - ஆப்கானிஸ்தானிற்கு இடையிலான வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் பாகிஸ்தானின் வாகா எல்லையை திறக்க அந்நாட்டு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் கோரிக்கைக்கு இணங்க மேற்படி நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ள பாகிஸ்தான் அரசு இன்று புதன்கிழமை முதல் வாகா எல்லை திறக்கப்படும் என அறிவித்தது.

இதேவேளை ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் பாகிஸ்தான் வழியே பஞ்சாப் பகுதியில் உள்ள வாகா எல்லையை கடந்து இந்தியாவுக்குள் வருவது வழக்கம்.

கொரோனா வைரஸ் பரவல் அடுத்து குறித்த எல்லை கடந்த மூன்று மாதமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



இந்தியாவில் எகிறும் வைரஸ் தொற்று ஒரே நாளில் 500 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வால் ஒரே நாளில் 500 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் பலி எண்ணிக்கை 23 ஆயிரத்தை தாண்டி உள்ளது.

இந்தியாவில் கொரோனா அதிவேகத்தில் பரவி வருகிறது.

இதனால் நாள்தோறும் நோய்த்தொற்றுக்கு ஆளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அந்த வகையில் நேற்று முன்தினம் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட புள்ளி விபரப்பட்டியலில், இதுவரை இல்லாத அளவில் ஒரே நாளில் 28 ஆயிரத்து 701 பேருக்கு நோய்த்தொற்று உறுதியாகி இருப்பதாகவும், மேலும் 500 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

அமெரிக்க அரசியல் தலைவர்கள் சீனாவிற்குள் நுழையத் தடை

(பீஜிங்)

அமெரிக்காவிற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்காவின் முக்கிய அரசியல் தலைவர்களுக்கு நாட்டுக்குள் நுழைய சீன அரசு தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. சீனாவில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு காரணமானவர்களுக்கு, அமெரிக்க அரசு தடையுத்தரவுகளை அறிவித்த சில நாட்களில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. சீனாவின் உத்தரவின் படி, சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க தூதர் சாமுவல் பிரவுன்பேக், நாடாளுமன்ற உறுப்பினர் கிரிஸ் ஸ்மித், செனட்டர் மார்கோ ரூபியோ மற்றும் டெட்க்ரூஸ் ஆகியோருக்கு நாட்டுக்குள் நுழைய தடைவிதிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியான் கூறுகையில், 'அமெரிக்காவின் செயற்பாடுகள் இரு நாட்டு உறவை சீர்குலைக்கும் வகையில் உள்ளன. சீன இறையாண்மையை மீறி உள்நாட்டு விவகாரங்களில் யார் தலையிட்டாலும் அதனை ஏற்க முடியாது. சீன உள்விவகாரங்கள் குறித்தும், சீனாவுக்கு எதிராகவும் பேசிய நால்வருக்கு சீனாவுக்குள் நுழைய தடை விதிக்கப்படுகிறது என கூறினார். அமெரிக்க அரசியல் தலைவர்களுக்கு இவ்வாறு சீனா தடை விதிப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

வறுமையின் கோரத்தாண்டவத்தால் 97 லட்சம் குழந்தைகள் கல்வி கற்க முடியாத நிலை

கொரோனாவின் பின் அவலம்

(லண்டன்)

கொரோனா பிரச்சினை முடிந்த பிறகு உலகம் முழுவதும் 97 லட்சம் குழந்தைகள் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்படுவார்கள்என்றுலண்டன்தொண்டு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

லண்டனை தலைமையிடமாக கொண்ட சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்ற தொண்டு நிறுவனம், கொரோனா வைரஸ் சூழ்நிலையில் கல்வியில் ஏற்படும் பாதிப்பு குறித்து ஒரு ஆய்வு நடத்தி உள்ளது.

கொரோனா காரணமாக ஊரடங்கு நிலவுவதால், உலகம் முழுவதும் 160 கோடி குழந்தைகள் பாடசாலைக்குச் செல்லாமல் உள்ளனர்.

கொரோனா பிரச்சினையால் உலகம் முழுவதும் வறுமை அதிகரிக்கும். கல்விக்கு அரசுகள் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கும் தொகை குறையும்.

இதனால், ஊரடங்கு முடிந்த பிறகு குழந்தைகள் பாடசாலைக்கு திரும்பச் செல்லாமல் இருக்கும் ஆபத்து, ஏற்படும் ஏமன், ஆப்கானிஸ்தான் மற்றும் மேற்கு, மத்திய ஆபிரிக்காவில் 12 நாடுகளில் அதிகமாக இருக்கும்.

உலகம்முழுவதும் 97 இலட்சம் குழந்தைகள், மீண்டும் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்படுவார்கள். இது, முன் எப்போதும் இல்லாத கல்வி நெருக்கடி நிலையாக இருக்கும்.

கல்விக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியை போக்க உலக நாடுகளும், நன்கொடையாளர்களும் கல்விக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டும்.

அத்துடன், ஏழை நாடுகள் கடனைத் திரும்பச் செலுத்துவதை நிறுத்தி வைக்க கடன் கொடுத்தவர்கள் முன்வர வேண்டும் என ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அசுரவேகத்தில் பரவிவரும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றினால், கடந்த 24 மணித்தியாலத்தில் 65,488 பேர் பாதிப்படைந்துள்ளதோடு, 465 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி அமெரிக்காவில் மொத்தமாக 34 இலட்சத்து 79 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்படைந்துள்ளதோடு, ஒரு இலட்சத்து 38 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர, 17 இலட்சத்து 91 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் சிகிச்சை

பல நாடுக

கொரோ

உல

(ஜெனீவா)

கடுமையான சுகாதா
நாடுகள் பின்பற்றத் தவ
கொரோனா வைரஸ் தொற்
ஸ்தாபனம் (WHO) எச்சரி

"பல நாடுகள் தவறான பாதையில் செல்கின்றன. கொரோனா வைரஸ் மக்களின் முதல் எதிரியாகவுள்ளது" என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரியஸிஸ் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்திலிருந்து காணொளி மூலம் செய்தியாளர்

புதிய தலைவ
கொங்கோ

(கின்ஷாச)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோ ஜனநாயகக் குடியரசு தலைநர் கின்ஷாசவில் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

புதிய தேர்தல் தலைவரை தேர்வு செய்வதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த ஆர்ப்பாட்டம் மற்றும்

அமெரிக்க
65 ஆயிரத்திற்கு

வெளிநாடு

டுகள் தவறான பாதையில் செல்கின்றன!

ானாத்தொற்று மிகவும் மோசமடையும்

லக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை றத் தவறினால், உலகெங்கிலும் உள்ள புதிய ஸ் தொற்று மோசமடையும் என்று உலக சுகாதார) எச்சரித்துள்ளது.



களிடம் பேசிய போது, "தகுந்த நடவடிக்கைகள் பின்பற்றப்படாத நாடுகளில் இந்தத் தொற்றுநோய் மிக மிக மோசமடையும்" எனத் தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் 13,236,249 பேர் கொரொனாத் தொற்றுக் குள்ளாகியுள்ளதுடன், 575,540 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தலைமையை கடுமையாக விமர்சித்த டெட்ரோஸ், கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிவான 230,000 புதிய தொற்றாளர்களில் 80 வீதமானவை 10 நாடுகளைச் சேர்ந்தவை, 50 வீதமானவை இரண்டு நாடுகளிலிருந்து வந்தவை என்று அறிவித்துள்ளார்.

இதில் அமெரிக்காவும் பிரேசிலும் தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளாகும்.

"எதிர்வரும் வாரங்களில் பழைய நிலைக்குத் திரும்புவது கடினம்.

இதில் கவலைப்பட வேண்டியது அதிகம்" என்று டெட்ரோஸ் மேலும் தெரிவித்துள்ளார். (2)

லவர் தெரிவுக்கு எதிர்ப்பு காவில் ஆர்ப்பாட்டம்

வன்முறை சம்பவங்கள் காரணமாக நால்வர் உயிரிழந்தும் உள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை முன்னாள் கிளர்ச்சித் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான ஜீன்-பியர்பெம்பாவின் வாகனத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளதுடன் தாக்குதலும் மேற்கொண் டுள்ளனர்.

அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்புகைத் தாக்குதல்களையும் தடியடி தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர். ரொன் சர்ட்மலோண்டாவைகொங்கோ குடியரசின் சுயாதீன தேசிய தேர்தல் ஆணையத்தின் தலைவராக நியமிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோசப் கபிலாவின் ஆதரவாளர்கள் ஆதிக்கம் செலுத்திய தேசிய சட்டமன்றம் எடுத்த முடிவால் இந்த போராட்டம் தூண்டப்பட்டுள்ளது. (2)

நெல்சன் மண்டேலாவின் மகள் காலமானார்

(ஜோகனஸ்பெர்க்)

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் இளைய மகள் ஜிண்ட்சி மண்டேலா வைத்தியசாலையில் காலமானார்.

தென்னாபிரிக்காவில், இன வெறியை எதிர்த்துப் போராடியவர் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா. இவர் கடந்த 2013 ஆம் ஆண்டில்

காலமானார்.

இவரது மனைவி வின்னி மண்டேலாவும் இன வெறியை எதிர்த்துப் போராடி உள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டில் வின்னி காலமானார்.

இந்நிலையில், நெல்சன் மண்டேலாவின் இளைய மகள் ஜிண்ட்சி மண்டேலா (59), ஜோகனஸ்பெர்க்கில் உள்ள வைத்தியசாலையில்காலமானார். அவரது இறப்புக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. ஜிண்ட்ஸிமண்டேலா டென்மார்க் நாட்டின் தூதராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

17 ஆண்டுகளின் பின் முதல்முறையாக மரணதண்டனை

அமெரிக்காவில், 17 ஆண்டுகளுக்குப் பின், ஒரு கொலை குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அமெரிக்காவின் ஒக்லஹோமாவை மாகாணத்தை சேர்ந்த டேனியல் லீ (வயது 47) என்பவர் கடந்த 1999ம் ஆண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, 3 பேரை கொடூரமாக கொலை செய்தார். இந்த வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.அமெரிக்காவில், 17 ஆண்டுகளுக்குப் பின், ஒரு குற்றவாளிக்கு, மரண தண்டனை விதிக்கப்பட்டது. இது முதல் முறையாகும். (2)

மரிக்காவில் ஒரேநாளில் திற்கு மேல் கொரோனாத்தொற்று

லட்சத்து 38 உயிரிழந் யிரத்திற்கும் ல் சிகிச்சை

பெற்று வருவதோடு, இதில் 15,934 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

மேலும், இதுவரை 15 இலட்சத்து 49 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அமெரிக்காவில் மிக பாதிப்பை எதிர்கொண்ட மாநிலமாக நியூயோர்க் மாநிலம் உள்ளது. அங்கு இதுவரை நான்கு இலட்சத்து 28 ஆயிரத்து 303 பேர் பாதிப்படைந்துள்ளனர். 32 ஆயிரத்து 445 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றினால் உலகளவில் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த நாடாக அமெரிக்காவே விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

கொரோனா பரவல் நிலைக்கு பொறுப்பேற்று பதவி விலகுங்கள்

பாலித ரங்கே பண்டார வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் அதிகரித்திருக்கும் கொரோனா வைரஸ் பரவல் நிலைக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் இதனைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் தமது தோல்வியை ஏற்றுக்கொண்டு உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஆரம்பத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரும் எண்ணிக்கையில் பரிசோதனைகளை முன்னெடுப்பது அவசியமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியபோது, அதனை ஆளும்தரப்பினர் கேலி செய்தனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆனால் தற்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ள நிலையில் அரசாங்கம் தமது பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நிறுத்தாமல் தோல்வியை ஒப்புக் கொண்டு உடனடியாகப் பதவி விலக வேண்டும் என பாலித ரங்கே பண்டார வலியுறுத்தினார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் அரச ஊழியர்களின் நலனை முன்னிறுத்தி முன்னெடுக்கப்பட்ட அனைத்து செயற்றிட்டங்களையும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் இடைநிறுத்திவிட்டது என்றும் குற்றம் சாட்டினார்.

அவ்வாறிருக்க நல்லாட்சி அரசாங்கத்தினால்

நிறுத்தப்பட்ட திட்டங்களை செயற்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அவர்கள் கோருவதாகவும் பாலித ரங்கே பண்டார சுட்டிக்காட்டினார். (ஜ-4)

பௌத்தத்திற்கே முன்னுரிமை வழங்கப்படும்

பிரதமர் மகிந்த உறுதி

(கொழும்பு)

பௌத்த மதத்திற்கே முன்னுரிமை வழங்கப்பட்டு ஏனைய மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொட்டுவைலுனவை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும் தத்தமது கலாசாரங்களை முழுமையாக பின்பற்றவும் முழு சுதந்திரம் உள்ளது. ஒற்றையாட்சியில் நாட்டுக்குள் பௌதத மதத்திற்கு முன்னுரிமை வழங்கி ஏனைய மதங்களின் உரிமைகளை பாதுகாத்து அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழும் சூழ்நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்படும்.

எமது ஆட்சியில் விகாரை, கோயில், பள்ளிவாசல் மற்றும் தேவாலயம் ஆகியவை மறுசீரமைக்கப்பட்டன. அபிவிருத்திப் பணிகளின் போது இனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. நாட்டுக்கே அபிவிருத்திப் பணிகள் ஒருமித்த விதத்தில் முன்னெடுக்கப்பட்டன என அவர் தெரிவித்தார். (ஜ-4)

ஜோர்தானிலிருந்து 285 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஜோர்தானில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 285 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

விசேட விமானம் மூலம் அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, விமான நிலையத்தில் வைத்து அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து, பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஹோட்டல்களில் அவர்களை தங்கவைக்க நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கடந்த சில நாட்களாக கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்ததைத் தொடர்ந்து, வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கை இன்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

வலிப்பு ஏன் வருகின்றது?

ஒருத்தர் நடந்து போய்க் கொண்டு இருந்தார். திடீரென்று கீழே விழுந்து கை, காலை உதற ஆரம்பித்தார். வாயிலே நுரை தள்ள ஆரம்பித்து விட்டது. கும்பல் கூடியது. கொஞ்ச நேரம் கழித்து அவர் எழுந்து நடந்து போகின்றார். என்ன காரணம்? காக்கா வலிப்புத்தான்...அதாவது கால், கை வலிப்பு. அதுசரி இது எதனால் வருகின்றது? வலிப்பு என்பது ஒரு நோயே கிடையாது. வைத்தியர்கள் அப்படித்தான் சொல்கின்றார்கள். வலிப்பு என்பது ஒரு நோயே இல்லை. மூளையின் பணியிலே ஏற்படுகின்ற ஒரு தடங்கல் தான் அது! என்கிறார்கள் அவர்கள். இதனால் நேரடியாக உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லை. இருந்தாலும் வலிப்பு வருகின்ற நேரத்திலே அவர்கள் என்ன வேலை செய்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதை பொறுத்து ஆபத்து அதிகரிக்கலாம். இப்போது ஒருத்தர் இயந்திரங்களுக்கு நடுவிலே வேலை செய்து கொண்டு இருக்கின்றார், ஒரு வீதியிலே குறுக்கே நடந்து போய்க்கொண்டு இருக்கின்றார். அது மாதிரி சமயத்திலே வலிப்பு வந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆபத்து தானே! அதனால் ஜாக்கிரதையா இருக்க வேண்டும்.

எப்பவாவது ஒரு தடவை வலிப்பு வருகிறவர்களுக்கு மருந்து தேவை இல்லை.

அடிக்கடி வலிப்பு வந்தால் மருந்து சாப்பிடலாம். சிலபேருக்கு அறுவை சிகிச்சை கூட தேவைப்படலாம். அது இருக்கட்டும் வலிப்பு எப்படி ஏற்படுகின்றது என்பதை இப்பொழுது தெரிந்து கொள்வோம்.

மூளையின் செயற்பாட்டிலே ஏதாவது சிக்கல் வந்துவிட்டது என்றால் அது வலிப்பை உண்டாக்குகின்றது. ஒருத்தருக்கு வலிப்பு வருகின்ற பொழுது அவருடைய மூளை வழக்கத்துக்கு மாறாக உயரழுத்த மின் அலைகளை வெளியிடுகின்றது.

பிறக்கின்ற பொழுது மூளை சேதமடைந்திருந்தாலும் சரி...கட்டி அல்லது காயம் இருந்திருந்தாலும் சரி வலிப்பு வரும். இது பரம்பரையாக வரக் கூடியது அல்ல.

மூளையிலே இரத்தம் பாய்கின்ற அளவு பாதிக்கப்பட்டாலும் வலிப்பு வரும்.

அளவுக்கு மீறி போதை மருந்து சாப்பிடுகின்றவர்களுக்கும் வலிப்பு வரும்.

ஆனாலும் பல பேருக்கு... இது மாதிரியான காரணங்கள் எதுவுமே இல்லாமல் கூட வலிப்பு வந்துவிடும்.

அது ஏன என்பதை கண்டு பிடிக்கிறதற்கு சில புதிய கருவிகள் உதவியாக இருக்கின்றது. வலிப்பு பற்றிய ஆராய்ச்சிக்கு நான்கு வகையான கருவிகள் உபயோகப்படுகின்றது.

ஈ.ஈ.ஜி. E.E.G-Electro Encephalo Graph)

பெட்- (P.E.T - Positron Emission Tomography)

சி.டி (C.T-Computer Tomography)

எம்.ஆர்.ஐ (M.R.I-Magnetic Resonance Imagery)

இந்தக் கருவிகள் வலிப்புக்கு மட்டும் இல்லை. மூளை சம்பந்தமான எல்லா நோய்களையும் கண்டுபிடித்து குணப்படுத்துகின்றவர்களுக்கு உதவியாக இருக்கும்.

எம்.ஆர்.ஐ.என்று சொல்லுகின்றோமே-இந்த உத்தியை கடந்த பத்து வருடமாக உபயோகப்படுத்திக் கொண்டு தான் வருகின்றார்கள். இது மூலமாக மூளையைப் படம் பிடித்து தொலைக்காட்சித் திரையிலே பார்க்கலாம். இந்தக் கருவியை இப்ப கொஞ்சம் மேம்படுத்தி இருக்கின்றார்கள். அதனாலே மூளையினுடைய சிறு பகுதியைக் கூட பெரிய உருவத்திலே பார்க்க முடியும்.

அதனாலே அங்கே உள்ள கட்டியையோ, காயத்தையோ இரத்த நாளத்தையோ, தெளிவாகப் பார்க்க முடியும். அப்படிப் பார்த்து அதற்குத் தகுந்த மாதிரி சிகிச்சை செய்யலாம்.

வலிப்பு யாருக்கு வருகின்றதோ அவர்களைவிட அதைப் பார்க்கிறவர்களுக்குத்தான் மிகவும் கஷ்டமாக இருக்கும்.

சிலபேருக்கு சின்ன வயதிலே வலிப்பு தொந்தரவு இருக்கும். பெரியவர்களானதற்கு பின்பு அது தானாகவே மறைந்துவிடும்.

எதுவாக இருந்தாலும் அது அதற்கு வைத்தியம் இருக்கு. மருத்துவ ஆராய்ச்சி அந்த அளவுக்கு வளர்ந்திருக்கு. அதனாலே கவலைப்படுவதற்கு ஏதுமில்லை. தைரியமாக இருக்க வேண்டும். அது தான் முக்கியம்.

ஒரு நாள்...ஒரு ஆள் நடுத் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தார். அவர் திடீரென்று கையை, காலை உதறிக் கொண்டு கீழே விழுந்து விட்டார். கன்னா பின்னா என்று கத்திக் கொண்டே மண்ணிலே கிடந்து புரள ஆரம்பித்து விட்டார்.

இதைப் பார்த்தவர்கள் உடனே பரிதாபப்பட்டு ஓடிப் போய் அந்த ஆளைக் கட்டிப் பிடித்து தூக்கிக் கொண்டு வீதி ஓரமாகக் கொண்டு வந்தார்கள். ஒருத்தர் சோடா வாங்கி வந்து கொடுத்தார். ஒருத்தர் முகத்திலே தண்ணீர் தெளித்தார்.

அந்த ஆள் அதற்குப் பிறகு மெதுவாக எழுந்து கொண்டு நின்றார். பக்கத்திலே இருந்தவர் மெதுவாக அவரிடம் கேட்டார்.

"ஏன் சேர்.. உங்களுக்கு இது மாதிரி அடிக்கடி வலிப்பு வருமா?" என்றார்.

அதற்கு அந்த ஆசாமி "சேர் இது வலிப்பு இல்லை. பிறேக் டான்ஸ் மாதிரி இது ஒரு புதுமாதிரியான டான்ஸ் . நடுத் தெருவிலே ஆடிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன் அவ்வளவு தான் என்று சொல்லி விட்டு உடம்பிலே இருந்த புழுதியையெல்லாம் தட்டிவிட்டுக் கொண்டு, அவன் பாட்டுக்கு நடந்து போகின்றான்.

தமிழர்களின் அடையாளங்கள் பறிபோவதை சம்பந்தனால் தடுத்து நிறுத்த முடியாது



(கொழும்பு)

தமிழர்களின் அடையாளங்கள் பறிபோவதைத் தடுத்து நிறுத்த சம்பந்தனால் ஒரு போதும் முடியாது என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அம்பாறை மாவட்டத்தில் மக்கள் எம்முடன் அணிதிரண்டுள்ளார்கள். தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்க மக்கள் எம்மோடு இணைந்துள்ளார்கள். இதனால் திறம்பட பாராளுமன்ற அதிகாரத்தின் பின் எதிர்கால அரசியலை முன்னெடுப்போம்.

கோட்டாபாய, மகிந்த அரசாங்கம் இன்னும் 20 வருடங்களுக்கு நீடிக்கும். இதனால் தனித்துவமாக களமிறங்கி தேர்தலில் உறுதியான பேச்சு வார்த்தையில் அரசுடன் கைகோர்ப்போம். திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தமட்டில் நில அபகரிப்பு, தொல்பொருள் என்ற போர்வையில் வணக்கஸ் தலங்கள் அபகரிப்பு என்பன காணப்படுகின்றன.

இதனை உடன் தீர்வு காண தமிழ் மக்கள் எம்மோடு இணைய வேண்டும். கடந்தகால ரணில் அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் எதையும் தமிழ் மக்களுக்காக செய்யவில்லை. இதனை மக்கள் உணர வேண்டும்.

மாற்றத்துக்கான சக்தியாக இந்த தேர்தலை வெற்றி கொள்ள களமிறங்கியுள்ளோம். கிழக்கு மக்களின் இருப்பையும் பாரிய அபிவிருத்தியையும் காணக்கூடிய அரசாங்கமாக கோட்டாபய உள்ளார். இதற்காக நாம் செயற்பட வேண்டும். 12 ஆயிரத்து 800 போராளிகள் அன்றைய அரசில் எவ்வித வழக்குகளுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அதுபோன்று 150 அரசியல் கைதிகள் உள்ளார்கள்.

இவர்களை விடுவிக்க ஜனாதிபதித் தேர்தலின் போதும் உடன்படிக்கை செய்துள்ளோம். நாடாளுமன்றத் தேர்தலின் பின் இதனை தொடர்ந்தும் அரசுடன் விடுதலை தொடர்பிலும் காத்திரமான நடவடிக்கைகளை எடுப்போம்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசியல் கைதிகளை வைத்து நாடகமாடுகிறது. எந்தவித தீர்மானமும் இல்லை.

பொதுஜன பெரமுன கட்சிக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை, அதில் உறுப்பினரும் இல்லை. தேர்தல் அதிகாரத்தின் பின் அரசுடன் இணைவோம்.

இறக்குமதி செய்யப்பட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்கள் திருகோணமலையில் களமிறக்கப்பட்டுள்ளார்கள். வீட்டுக்கு வாக்களித்து வாக்களித்து வீடு வாசல்களே அழிந்து போய் உள்ளன.

சம்பந்தன் ஓய்வு எடுக்க வேண்டிய நிலையில் தள்ளாடும் வயதில் அதிகாரத்தைப் பெற முயற்சிக்கிறார். நல்லதொரு தலைவராக இருந்தால் இளைஞர்களுக்கு விட்டுக் கொடுத்து விட்டு ஓய்வெடுத்திருக்க வேண்டும். திருகோணமலை வரலாற்றுமிக்க கோணேஸ்வரத்திற்குச் சென்ற மதகுரு அதனை தக்க வைத்துக் கொள்ள முயல்கின்றார்.

இதனை தடுத்து நிறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முடியாது. அராஜக அரசியலை விட்டு மக்கள் எம்மோடு இணைய வேண்டும்" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

கருணா காட்டம்

ரயிலில் பயணிப்போர் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணுங்கள்

ரயில் திணைக்கள பொது முகாமையாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பொதுப் போக்குவரத்து சேவைப் பயன்பாட்டின் ஊடாகவே இரண்டாம் அலையாக தாக்கம் செலுத்துவதற்கு வாய்ப்புள்ளது. ரயிலில் பயணிகள் பயணம்செய்யும் போது ஒரு மீற்றர் தூர இடைவெளியை பேணுவது சாத்தியமற்றதாக உள்ளது.

பயணிகளே தங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என ரயில் திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பிரணாந்து தெரிவித்தார்.

கொவிட் - 19 வைரஸ் கொத்தணி பரவலாக காணப்படும் நிலையில் அதிகளவான தொற்றாளர்கள் சமூகத்தில் இனங்காணப்படலாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ள நிலையில், பொதுப்போக்குவரத்து சேவை அதிக அவதான மட்டத்தில் உள்ளது. இவ்விடயம் தொடர்பில் ரயில் திணைக்களத்தில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த சுகாதார தரப்பினர் அறிமுகப்படுத்திய பாதுகாப்பு அம்சங்கள் முழுமையாக அனைத்து ரயில் நிலையங்களிலும் பின்பற்றப்படுகின்றது. ரயில்நிலையத்திற்குள் உட்பிரவேசிக்கும் முன் கைகழுவுதல், உடல் வெப்பநிலையை அவதானித்தல் ஆகியவை இடம்பெறுகின்றன.

ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிட்டது மாத்திரம் ரயில் சேவையில் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த வேளையில் ரயில் சேவையின் போது ஒரு மீற்றர் தூர இடைவெளி பின்பற்றப்பட்டது.

ஆனால் தற்போது தூர இடைவெளியை பின்பற்றுவது முடியாத காரியம்.

ரயில்களில் பயணிகள் நெருக்கமாகவே பயணம் செய்கிறார்கள். தற்போதைய ரயில் சேவையைப் பயன்படுத்தும் பொது மக்களின் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு ரயில் திணைக்களம் தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்க முடியாது.

அரசாங்கத்தினால் குறிப்பிடப்பட்ட சுகாதார அறிவுறுத்தல்களை முழுமையாக கடைப்பிடிக்கிறோம். ஆகவே பொது மக்கள் தங்களின் சுய பாதுகாப்பினை முறையாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அநாவசியமான பயணங்களைத் தவிர்த்துக் கொள்வது கட்டாயமாகும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

தனியார் வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டது

(கொழும்பு)

கம்பஹா - ராகமவில் அமைந்துள்ள ஒரு தனியார் வைத்தியசாலையைத் தற்காலிகமாக மூட சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று உறுதியான ஒருவர் அடையாளம் காணப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையிலுள்ள ஊழியர்கள் மற்றும் நோயாளிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன என்றும் இதைத் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அம்மாவட்ட பொது சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில், பி.சி.ஆர். சோதனைகளின் முடிவுகள் கிடைக்கும் வரை வைத்தியசாலையை தற்காலிகமாக மூட முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஜ-4)

7 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

ஹோமாகம பகுதியில் ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களில் வைத்தியர் மற்றும் மருத்துவ நிலைய மொன்றின் உரிமையாளர் ஒருவரும் காணப்படுவதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அதாவது கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தை சேர்ந்த இரு இராணுவத்தினருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஹோமாகமவிலுள்ள குறித்த இராணுவத்தினரின் உறவினர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

கலாநிதி முருகர் குணசிங்கம்

22

இவ்வாறானவர்கள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தங்களது பதிவைப் புதுப்பித்துத்தான் இருக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இருந்தும் ஏற்கனவே ஜேர்மனி நாட்டுக்கு வந்து அகதிகளுக்கான தகுதி பெற்றவர்கள் தமது குடும்பங்களையும் தம்மோடு சேர்த்துக் கொள்வதற்கு ஜேர்மனி அரசு அனுமதி வழங்கியதால் பலரின் குடும்ப உறுப்பினர்கள் தொடர்ந்தும் ஜேர்மனிக்குள் வந்து கொண்டு இருந்தனர்.

ஆனால் 2005 இல் மேற்படி நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. அகதிகள் சட்டத்தில் ஏற்பட்ட திருத்தமும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு விசேடமாக வழங்கிய சிறப்பு உரிமையுமே இவ்வாறான மாற்றம் ஏற்படக் காரணமாக இருந்தது.

இதன்படி "சகித்தல்" கொள்கை முடிவுக்கு வந்தது. ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக ஜேர்மனியில் இருந்தவர்களுக்கும் எட்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக ஜேர்மனியில் தொழில் புரிந்தவர்களுக்கும் வதிவிட உரிமை வழங்கப்பட்டது.

அவ்வாறான நிலைமையில் இல்லாத ஈழத்தமிழர்களுக்குக் காலவரையறையற்ற (Unlimited) வதிவிட அனுமதி வழங்கப்பட்டது.

அதுமட்டும் அல்லாமல் நிரந்தர அகதித் தஞ்சமும் ஜேர்மனியில் குடியுரிமை பெற்றவர்களுக்கு "சிறப்புத் தொழிற்சான்றிதழும்" (Special Permit) அவ்வாறு அல்லாத மேற்குறிப்பிட்டோருக்கு "பொதுவான அனுமதிப் பத்திரமும்" (General Permit) வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பின்னணியில் இருந்து ஜேர்மனி அரசும் அதன் சட்டங்களும் ஈழத்தமிழர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து இருப்பதை அவதானிக்க முடிகிறது.

அதாவது நிரந்தர வதிவுரிமையும் ஜேர்மனி குடியுரிமை பெற்ற ஒரு பிரிவினரையும் வதிவிட உரிமையும் கால வரையறையற்ற வதிவிட உரிமையும் பெற்ற இன்னொரு பிரிவினரையும் உருவாக்கி இருக்கின்றது.

இந்நிலைமை ஈழத்தமிழர் அகதிகள் மட்டத்தில் பெருமித உணர்வு கொண்ட ஒரு பிரிவினராகவும் தாழ்வு மனப்பான்மை கொண்ட இன்னொரு பிரிவினராகவும் பிளவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

மேற்கூறப்பட்ட அனைத்து நாடுகளைப்போல் ஜேர்மனி அரசின் புள்ளி விபர அலுவலகம் (Federal Statistical Office Germany) இன அடிப்படையிலான மக்கள் தொகைக் கணக்கீட்டைக் கொண்டிருக்கவில்லை.

இந்துக்கள் என்ற அடிப்படையில் ஜேர்மனியில் வாழும் இலங்கையர்கள் தொகை கணிக்கப்பட்டு இருக்கின்றது. எனவே ஜேர்மனி சனத்தொகைக் கணக்கெடுப்பில் உள்ள புள்ளி விபரங்களைக் கொண்டு எவ்வளவு ஈழத்தமிழர்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவது எளிதாக இல்லை.

ஆனால் பல்வேறு ஆவணங்கள், அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் கிடைக்கப் பெற்ற தரவுகளைக் கொண்டு ஜேர்மனியின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இலாகாப் புள்ளி விபரங்களோடு ஒப்பீட்டு அடிப்படையில் நோக்கும் போது சுமார் 60,000 இலங்கையர்கள் ஜேர்மனியில் வாழ்கின்றனர் என்பதனைக் கணிக்க முடிகின்றது.

அதில் சுமார் 50,000 பேர் ஈழத் தமிழர்களாக உள்ளார்கள் என்ற முடிவுக்கு வரக் கூடியதாக உள்ளது.

ஜேர்மனி அரசு இன அடிப்படையிலான குடியேற்றங்களைத் தவிர்ப்பதற்கான ஈழத்தமிழ் அகதிகளை ஜேர்மனியில் உள்ள பல்வேறு மாநிலங்களில் குடி அமர்த்தி உள்ளது.

ஆனால் சுமார் 50 விழுக்காடு ஈழத் தமிழர்கள் மேற்கு ஜேர்மனியில் உள்ள

வட றைன், வெஸ்ட்பாலியா (Sefali of North Rhine Westphalia) மாநிலங்களில் தான் வாழ்கின்றார்கள்.

பாரிய தொழிற்சாலைகளும் அதிக அளவில் அயல் நாட்டவர் வாழுகின்ற பகுதிகளாகவும் மேற்படி மாநிலங்கள் காணப்படுவது அதற்கான காரணமாக இருக்கலாம்.

சுவிட்சர்லாந்து

சுவிட்சர்லாந்தில் வாழும் ஈழத்தமிழ் அகதிகளைப் பற்றிச் சில ஆய்வு நூல்களும் கட்டுரைகளும் ஏற்கனவே வெளி வந்து இருக்கின்றன.

ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு 1970 களில் இருந்தோ அல்லது அதற்கு முன்போ ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்ததுபோல் அல்லது அகதிகளாகக் குடியேறியதுபோல் சுவிட்சர்லாந்துக்குச் சென்று குடியேறவில்லை.

1980களில் இருந்தே சிறுதொகையில் ஈழத்தமிழர்கள் அகதிகளாகச் சென்றதையும் 1990 களுக்குப் பின்னரே பெருமளவிலான ஈழத்தமிழர்கள் அகதிகளாக சுவிட்சர்லாந்துக்குச் சென்று அகதி அந்தஸ்துக்கோரி வாழ்கின்றார்கள்.

இலங்கையில் இருந்து சுவிட்சர்லாந்திற்குச் சென்று வாழும் மொத்த மக்களுள் 95 விழுக்காட்டினர் இலங்கைத் தமிழர் என்பதனையும் புள்ளி விபரங்கள் காட்டி நிற்கின்றன.

ஈழத்தமிழர்கள் பற்றிய புள்ளி விபரங்களைப் பெறுவதன் பொருட்டு 2013 இன் இறுதிப் பகுதியில் இந்நூலாசிரியர் சுவிட்சர்லாந்தின் புள்ளிவிபர அலுவலகம் (Federal Statistical office) சென்று ஆய்வுகள் நடத்தியபோது அவை அனைத்தும் ஜேர்மன் அல்லது பிரெஞ்சு மொழியில்தான் இருப்பதைக் காண முடிந்தது.

அங்கு தொழில் புரியும் அலுவலர் நன்கு ஆங்கிலம் தெரிந்தவராக இருந்த படியால் பல புள்ளி விபரங்களைத் திரட்ட முடிந்தது.

இங்கே மத அடிப்படையில் மக்கள் தொகை பதிவு செய்யப்பட்டு உள்ளது. 2000, 2010 ஆண்டுகளின் புள்ளி விபர அறிக்கைப்படி ஈழத்தமிழர்களின் மொத்தத் தொகையில் சுமார் 80 விழுக்காட்டினர் இந்துக்களாகவும் 10 விழுக்காட்டினர் கிறிஸ்தவர்களாகவும் 5 விழுக்காட்டினர் பௌத்த, இஸ்லாம் மதம் சார்ந்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

அத்தோடு பன்னாட்டு நெருக்கடிக் குழு (International Crisis Group: Asia Report No.186, 2010) அறிக்கையின் வாயிலாகவும் ஈழத்தமிழர்கள் பற்றியும் புலம்பெயர்வு பற்றியும் பெருமளவில் விபரங்களைத் திரட்ட முடிந்தது.

மேற்கூறப்பட்ட அறிக்கைகள் ஆய்வு நூல்களில் இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன ஒடுக்குமுறை, இன அழிப்பு நடவடிக்கைகளால்தான் அவர்கள் 1980களில் இருந்து சுவிட்சர்லாந்திற்கு அகதிகளாக வந்து சேர்ந்தனர் என்று கூறப்பட்டு உள்ளது.

இருந்தும் ஒரு சில ஆய்வாளர்கள் ஈழத்தமிழர்கள் பொருளாதார அகதிகள் (Ecanimic Refugees) என்ற நோக்கில் பார்க்கின்றனர்.

ஆனால் அ[illegible] முறைகளால் அழிவுக்கு உள்ளான ஓர் இனம் தம்மைப் பாதுகப்பதற்கும் சொந்த நாட்டில் எஞ்சி இருக்கின்ற தம் குடும்பத்தினரை, உறவுகளை வாழ வைப்பதற்கும் அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்கும் ஒரு வளமான நாட்டுக்குத் தப்பி ஓடி அகதி அந்தஸ்து கோருவதில் என்ன தவறு இருக்க முடியும் என்பதை மேற்கண்ட கருத்துகளைத் தெரிவித்த ஆய்வாளர்கள் சிந்திக்கவில்லை.

எது எப்படி இருப்பினும் ஈழத்தில் இருந்து சுவிட்சர்லாந்திற்குள் புகுந்த தமிழர்களுள் 95 விழுக்காட்டிற்கும் மேலானவர்கள் அகதிகளாகவும் கல்வித் தரத்தில் குறைந்தவர்களாகவும் காணப்படுவதைப் புள்ளி விபரங்கள் காட்டி நிற்கின்றன.

ஆனால் பிரித்தானியா, கன்டா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு 1970 களில் இருந்தோ அல்லது அதற்கு முன்போ சென்றவர்களுள் பெரும்பான்மையினர் படித்தவர்களாகவும் மத்திய உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

ஆனால் 1980 களின் பின்னர் மேற்படி நாடுகளுக்குப் பல்வேறு மட்டத்தினரும் அகதிகளாகச் சென்று இருப்பதை அவதானிக்க முடிகிறது.

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து போன்ற நாடுகளுக்கு 1980 களில் சென்ற ஈழத்தமிழ் அகதிகளில் அதிக பெரும்பான்மையினர் கல்வித் தகைமை அற்றவர்களாகவே இருப்பதை அறிய முடிகிறது. அந்த வரிசையில் சுவிட்சர்லாந்து நாட்டுக்குச் சென்ற ஈழத்தமிழர்களும் இடம்பெறுவதைக் காண முடிகின்றது.

1980 - 1994 காலகட்டங்களில் சுவிட்சர்லாந்துக்குச் சென்ற ஈழத்தமிழர்கள் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு இருப்பதை அறிய முடிகிறது.

அதன் விளைவாகப் பலருக்கு சுவிட்சர்லாந்து நாட்டில் வாழ்வதற்கான "அகதி" அந்தஸ்தும் வதிவிட உரிமையும் அதில் கணிசமானவர்களுக்குக் குடியுரிமையும் வழங்கப்பட்டு இருக்கின்றது.

இக்காலப்பகுதிக்குள் சென்றவர்கள் வதிவிட உரிமை பெற்றவுடன் தமது மனைவி அல்லது கணவன் மற்றும் பிள்ளைகளைக் குடும்ப மீள் இணைவு (Family Reunions) அடிப்படையில் சுவிட்சர்லாந்து நாட்டுக்கு அழைக்கவும் முடிந்தது.

இதன் அடிப்படையில் சனத்தொகை இலாகாவின் அறிக்கையில் 1981 இல் 526 ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்பட்டு இருக்கின்றது.

இத்தொகை 1991 இல் சுமார் 5578 ஆக உயர்ந்தது. 2001 இல் 24,495 ஆகவும் 2010 இல் 28,963 ஆகவும் உயர்ந்தது.

(தொடரும்)

தமிழ் மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக இந்தத் தேர்தலை மாற்றி அமையுங்கள்

"மீன்" ஆட்சி மலர அறைகூவுகிறார் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்

(சாவகச்சேரி)

கடந்த தேர்தலின் போது நீங்கள் வழங்கிய அதிகாரத்தின் மூலம், அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து சலுகைகளை அனுபவிப்பவர் களுக்கு தண்டனை வழங்குவதாக இத்தேர்தல் முடிவுகள் அமை யட்டும் என நீதியரசரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத் தின் போதே மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எமது தேர்தல் விஞ்ஞாபனம் மிக விரை வில் வெளியிட்டு வைக்கப்படும். இருந்த போதிலும் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்பட் டிருக்கின்றன என்பதை மிகவும் சுருக்க மாகத் தெரிவிக்கின்றேன்.

1. தமிழ் மக்கள் பேரவை தயாரித்த அரசியல் தீர்வு விரைவில் தெளிவுபடுத் தப்பட்டுள்ளபடி சட்டப்படி வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் ஒருதேசம். இலங்கையின் வடக்கு,கிழக்கு அவர்களின் மரபுவழித் தாயகம். பராதீனப்படுத்த முடியாத சுய நிர்ணய உரிமைக்கு வடக்குக் கிழக்கு மக்கள் உரித்துடையவர்கள். இவற்றின் அடிப்படையில் இணைந்த வடக்கு, கிழக் கில் இறைமையுடனான உயர்ந்த மட்ட தன்னாட்சியை சமஷ்டி அடிப்படையில் பெற்றுக்கொள்வதே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நோக்கமாகும். ஆனால், இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லவே இல்லை என்றும் பொருளாதார பிரச்சினையே இருக்கிறது என்றும் ஜனா திபதி மிகவும் திட்டவட்டமாக அறிவித் துள்ள நிலையில் இனப் பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு தொடர்பில் சர்வதேச ரீதியாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்து வதைத் தவிர எமக்கு வேறு எந்தத் தெரி வுமே இல்லை. எரித்திரியாவில் 1990 ஆம் ஆண்டு தொடங்கியது முதல் பிரித்தானி யாவில் ஸ்கொட்லாந்து, கனடாவில் கியூ பெக், கிழக்கு திமோர், சூடான் என்று பல நாடுகளில் பிணக்குகள் மற்றும் தேசிய இனங்களின் அதிகாரங்களைத் தீர்மா னித்துக் கொள்வதற்கு சர்வதேச சமூகம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியிருக்கின் றது. ஆகவே, இலங்கையில் எத்தகைய ஒரு தீர்வு தமக்கு வேண்டும் என்பதை தமிழ் பேசும் மக்கள் தீர்மானிக்கும் வகை யில் சர்வதேச சமூகம் சர்வஜன வாக்கெ டுப்பு ஒன்றை நடத்த வேண்டும் என்று கோரி தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அரசியல், இராஜதந்திர ரீதியாக அர்ப்பணிப் புடன் செயற்படும். நாம் குறிப்பிடும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு இந்த சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் தெரிவுகளில் ஒன்றாக இருக்கும்.

அதேவேளை, இறுதித் தீர்வை எட்டும் வரை யுத்தத்தினால் அழிவடைந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பு வதற்காக ஒரு இடைக்காலத் தீர்வினை சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையுடன் ஏற்படுத்துவதற்கு இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளுடன் நாம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்.

2. இன அழிப்பு நடைபெற்று 10 வரு டங்கள் கடந்துள்ள போதிலும் போர்க் குற் றம், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றம் மற்றும் இன அழிப்புக் குற்றம் ஆகியவற் றுக்கு நீதி கிடைக்கவில்லை. அதேசமயம், ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங் கையின் அனுசரணையுடன் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்பட்ட 30/1 தீர்மா னத்தில் இருந்து இலங்கை அரசாங்கம் தற்போது விலகுவதாக அறிவித்துள்ள நிலையில் இலங்கையை சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துமாறு சர்வதேச நாடுகளை வலியுறுத்துவதே எம க்கிருக்கும் அடுத்த வழி. ஆனால் ஐ.நா. சபையில் இருந்து இலங்கையின் உறுப்புரி மையை நீக்க வேண்டும் என்றும் அழுத் தங்கள் பிரயோகிக்கப்படலாம். நான் ஏற்க னவே இந்த இரண்டு விடயங்களையும் பல இடங்களிலும் வலியுறுத்தி இருப்பது டன், ஐ.நா.செயலாளர் நாயகம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஆகி யோருக்கு கடிதங்களையும் எழுதியுள் ளேன். இந்த நடவடிக்கைகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற அந்தஸ்து டன் நாம் மேலும் சிறப்பாக எதிர்காலத்தில் செய்ய முடியும்.

3. வடக்கு,கிழக்கில் வாழ்ந்துவரும் 90,000 விதவைகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் வாழ்வாதாரத் திட் டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருக்கின் றோம். இதற்கு முன்னோடியாக "தேவைகள் மதிப்பீடு" ஒன்றை விதவைகள் மத்தியில் நாம் விரைவில் நடத்த இருக்கின்றோம். அடிப்படை வேலைகள் முடிந்து விட்டன.

4. காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச் சினைகள் தொடர்பில் நாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம். இவர்களின் பிரச்சினை களைக் கையாளும் வகையில் சட்ட வல்லு நர்கள் குழு ஒன்றை நாம் அமைக்க இருக் கின்றோம். இன அழிப்பு தொடர்பில் சர்வ தேச ரீதியான சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்படும் பொழுதே காணாமல் ஆக்கப் பட்டவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று நாம் நம்புகின்றோம். இதனடிப்படையில், சர்வதேச விசாரணை ஒன்றை இயன்றளவு விரைவாகக் கொண்டு வருவதற்கு நாம்பாடுபடுவோம். அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவின ர்களின் பிரச்சினைகளை அறிந்து புலம் பெயர் தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச அமை ப்புக்கள் ஆகியவற்றின் உதவியுடன் அவற் றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

5. பல வருடங்களாக சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளை விடு தலை செய்யும் பொருட்டு சட்டவல்லுநர்கள் குழு ஒன்றை விரைவில் அமைத்து செய் யக்கூடிய எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்வோம். குறிப்பாக பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதற்கு உள்நாட்டி லும் சர்வதேச அளவிலும் பாடுபடுவோம். அதேசமயம் ஜனாதிபதி மற்றும் அரசாங் கத்துடன் இவர்களின் விடுதலை தொடர் பில் பேச்சுவார்த்தை நடத்துவோம். பாரா ளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் எமது உறுப்பினர்கள் ஐ.நா,சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புக்கள், இந்திய அரசு ஆகிய வற்றுடன் இது விடயத்தில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்துவார்கள்.

6. உலகில் உச்சளவு இராணுவமய மாக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக வடக்கு-கிழக்கு தொடர்ந்து காணப்படுகின்றது. தனியார் காணிகளில் இருந்து மட்டுமன்றி வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. 1983 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருந்த நிலைக ளுக்குள் இராணுவம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்ற மட்டத்தி லும் ஐ.நா.மட்டத்திலும் நாம் வலியுறுத்து வோம். இராணுவத்தினர் தொகை தற்போது மிக அதிகமாக விரிவடைந்துள்ளதை மனதில் வைத்து உரிய தீர்வுகள் ஆராயப்ப டுவன.

7. சர்வதேச சட்டங்களின் அடிப்படை யில் இங்கு நடைபெறும் நில ஆக்கிரமிப்பு மற்றும் பௌத்தமயமாக்கல் நடவடிக்கை கள் பாரிய மனித உரிமை மீறல்களாகும். ஐ.நா.சர்வதேச மனித உரிமைகள் அமை ப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் கவனத்தை இந்த விடயத் தில் ஈர்த்து அவர்கள் இது தொடர்பில் ஆய்வுகளையும் கண்காணிப்பு அறிக்கை களையும் வெளியிட்டு அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க நடவடிக் கைகளை எடுப்போம். அதேவேளை, இலங்கை சட்டத்துக்கு உட்பட்ட ரீதியில் மேற்கொள்ளக் கூடிய அனைத்து முயற்சி களையும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் எடுப்போம். குறிப்பாக, ஐ.நா.மனித உரிமைகள் சபையில் தமிழர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பை நிறுத்தும் தீர்மானம் ஒன்றை கொண்டு வருவதற்கும் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் ஐ.நா.விசேட பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கும் நாம் முயற்சிகள் மேற்கொள்வோம்.

8. தமிழ் மக்களின் பொருளாதார அபி விருத்தி, கல்வி, விளையாட்டு மற்றும் கலா சார மேம்பாட்டை ஏற்படுத்துவதில் நாம் கூடுதல் கரிசனையுடன் செயற்படுவோம். இது தொடர்பில் பல்வேறு கட்டமைப்பு ரீதி யான திட்டங்களை நாம் வகுத்துள்ளோம். இவற்றை நிறைவேற்ற அரசாங்கத்திடம் இருந்து பெறக்கூடிய அனைத்து வளங்க ளையும் நாம் பெறுவதுடன் தமிழகம், புலம் பெயர் மக்கள் ஆகியோரின் உதவிகளை ஒன்றிணைத்துப் பயணிக்க இருக்கின் றோம். தமிழ்நாட்டுடனான உறவுகளை வலுப் படுத்தி எமது பகுதிகளில் தொழில்வாய்ப்புக் களை ஏற்படுத்தும் முதலீடுகளை மேற் கொள்வதற்கு நாம் விசேட கவனம் செலுத்து வோம். எமது எல்லா முயற்சிகளும் நிறு வனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்படுவன.

9. 1958 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் அருங்காட்சியகங்கள் மற்றும் நினைவு ஸ்தூபிகளை அமைக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

10. மற்றும் வரலாற்று ரீதியாக எம்மை சரியாக அடையாளம் காணும் விதத்தில் தொல்பொருள் அருங்காட்சியகங்களை உருவாக்குவோம்.

11. சர்வதேச ரீதியில் எல்லா நாடுகளு டனும் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசியல், பொருளா தார, சமூக மற்றும் கலாசார மேம்பாட்டை ஏற்படுத்தவும் நாம் தொடர்புகளை பேணு வோம். இதில் இந்தியா முக்கியமானது. இலங்கையில் தமிழ் மக்களின் பாது காப்பையும் அவர்களின் சுயநிர்ணய உரிமையினையும் உறுதிப்படுத்துவது மட்டுமன்றி வடக்கு,கிழக்கின் சமூகப், பொருளாதார, கல்வி மறுமலர்ச்சிக்கு இந்தியா காத்திரமான ஒரு வகிபாகத்தை மேற்கொள்ள வேண்டும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப் போம். குறிப்பாக, பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு, காங்கேசன்துறை, திருகோண மலை, தலைமன்னார் ஆகியவற்றுக்கும் இந்தியாவுக்குமான கப்பல் போக்குவரத்து ஆகிய செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு தமிழ்த்தேசிய மக்கள் கூட்டணி நடவடிக்கைகளை எடுக்கும்.

இச்சுருக்கத்தை உங்கள் முன் சமர்ப் பிக்கும் அதேவேளை நாம் சில விட யங்களை எம் மக்கள் முன் கொண்டுவர இருக்கின்றோம்.

சுயநலம் மற்றும் சலுகைகள் ஆகிய வற்றுக்கு அப்பால், தமிழ்த்தேசிய கூட்ட மைப்பின் சகல தோல்விகளுக்கும் தவறு களுக்கும் முக்கியமான ஒரு காரணம் ஒரு சிலர் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப முடிவுகளை எடுத்து செயற்பட்டமை ஆகும். அந்தத் தவறை நாம் விடப்போவ தில்லை. அதனால் தான் எமது செயற்பாடு கள் நிறுவன ரீதியான கட்டமைப்புக்களின் ஊடாக நன்கு ஆராயப்பட்டு முன்னெடுக்கப் படவிருக்கின்றன.

நிறுவனமயப்படுத்தல் என்னும் பொழுது அரசியல் தீர்வு விடயம் சம் பந்தமாகவும் சரி, சமூக, பொருளாதார மேம்பாடு பற்றியதானதாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் அவற்றுக்கான செயற்பாடுகளில் நிலைத்து நிற்கும் தன் மையும் உபாயங்களும் தனி ஒருவரில் தங்கி இருக்காமல் அந்த நோக்கங்கள் தொடர்பிலான கோட்பாடுகள் மற்றும் நடை முறைகளின் மீதான கூட்டுப்பொறுப்பிலும் பற்றுறுதியிலும் தங்கி இருத்தலாகும். இதன் அடிப்படையில், உலகளாவிய ரீதி யில் பரந்து வாழும் தமிழ் புத்திஜீவிகளை ஒருங்கிணைத்து நிலத்திலும் புலத்திலும் கட்டமைப்புக்களை உருவாக்கிச் செயற்பாடு களை முன்னெடுக்கவுள்ளோம். நாம் மேலே குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளை இந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற் பாடுகளே பெற்றுத்தரும்.

ஆகவே, வடக்கு,கிழக்கில் வாழ்கின்ற எமது அன்புக்கினிய மக்களுக்கு நாம் கூற விழைவது யாதெனில் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்ற விதியை தீர்மானிக்கும் முக்கிய தேர்தலாக இத்தேர்தல் அமைகின்றது. உங்கள் வாக்குகள் தான் அந்த விதியை எழுதப்போகின்றன. நீங்கள் எழுதும் விதி வடக்கு-கிழக்கில் "மீன் ஆட்சி" மலர்வதற் கானதாக இருக்கட்டும். நாம் ஒருபோதும் தமிழ் மக்களின் உரிமைகள், நல்வாழ்வு, பாதுகாப்பு ஆகியவற்றுக்கான எமது பற்று றுதியில் இருந்து தளர மாட்டோம். வரும் தேர்தலில் தயவு செய்து "மீனுக்கு" புள்ளடி இடுங்கள். உங்களின் வாக்குகள் எமது தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொரு ளாதார மாற்றத்துக்கும் கலாசார அபிலா ஷைகளை வென்றெடுப்பதற்கும் வலுவூட் டுவதாக அமையட்டும்! இனப்படுகொலை க்கு நீதியைப்பெற்றுத் தருவதாக அமையட் டும்! உங்களை ஏமாற்றியவர்களுக்கு த பாடம் புகட்டுவதாக அமையட்டும்! நீங்கள் சென்ற முறை வழங்கிய அதிகாரத்தை அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்து சலு கைகளை அனுபவித்தவர்களுக்கு தண் டனை வழங்குவதாக அமையட்டும்! என நீதியரசர் மேலும் தெரிவித்தார். (2-4)

ஆடி மாத இராசி பலன்கள்

16.07.2020-16.08.2020

சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தொடக்கத்தில் இராசி நாதன் செவ்வாய் விரய ஸ்தானத்தில் குரு வீட்டில் சஞ்சரிக்கின்றார். குருவின் பார்வை பலத்தால் நினைத்தது நிறை வேறுவதற்கான சூழ்நிலை உருவா கும். சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜூலை மாதம் 27 ஆம் திகதி உங் கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், கடக இராசிக்குச் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். இதனால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் பலன் கிடைக்கும். உடன் பிறப்புகளின் வேலை அல்லது தொழில் சம்பந்தமாக முயற் சிகள் செய்தால் அதில் வெற்றி உண்டு. உத்தியோகத்தில் இதுவரை கிடைக்காத சலுகைகள் இப்பொழுது கிடைக்கலாம்.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூலை 30 ஆம் திகதி மிதுன இரா சிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதி பதியானவர் சுக்கிரன். அவர் சகாய ஸ்தா னத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறுவதற் கான அறிகுறிகள் தோன்றும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். அதிகாரப் பதவியில் உள்ள வர்களின் நட்பால் அரைகுறையாக நின்ற பணிகள் முழுவதும் முடிவடையும்.

மேஷ செவ்வாயின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 12 ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ் வாய் வருகின்றார். இந்த நேரம் ஒரு நல்ல நேரமாகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வியா பாரத்தை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வேலையில் இருப்பவர்களுக்கு அதிக சம்பளத்துடன் புதிய வேலைக்கான அழைப்பு வந்து

சேரும். அக்கம் பக்கத்து வீட்டாரின் ஆதரவு கிடைக்கும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும்.

சிம்ம புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5 ஆம் இடமான புத்திர ஸ்தானத்தில் ஓகஸ்ட் 13 ஆம் திகதி புதன் சஞ்ச

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின் றார். தனாதிபதி புதன் தன ஸ்தானத் திலேயே சஞ்சரிக்கின்றார். குரு, தனுசு இராசியில் தன் சொந்த வீட்டில் வக்கிர இயக்கத்தில் சஞ்சரித்தபடி 2, 4, 12 ஆகிய மூன்று இடங்களையும் பார்க் கின்றார். எனவே இந்த மாதம், உங் களுக்கு எதிர்பாராத நல்ல மாற்றங் களைத் தரும் மாதமாக அமையப் போகின்றது. உடல் நலமும் மன நலமும் தெளிவு பெறும்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜூலை 27 ஆம் திகதி கடக இராசி யில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். இதனால், பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். சகோதர வழியில் ஏற்பட்ட பகை மாறும். வெகு நாட்களாக முயற் சித்த காரியம் இப்பொழுது நிறை வேறும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினை கள் அகலும். பிள்ளைகளின் நீண்ட நாளைய கனவுகளை நனவாக்கும் முயற்சி கைகூடும்.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூலை 30 ஆம் திகதி உங்கள் இராசிநாதன் சுக்கிரன், தன ஸ்தானமான மிதுனத் திற்குச் செல்கின்றார். எனவே பொருளா தார வளர்ச்சி திருப்தி தரும். கிடைக் காமல் போன ஒப்பந்தங்கள் உங்களைத் தேடி வரும். உத்தியோகத்தில் வரவே ண்டிய சம்பள பாக்கிகள் கிடைக்கும். அதிரடியாக சில முடிவுகளை எடுத்து அருகில் உள்ளவர்களை அசர வைப்

பீர்கள். 'உடன் பிறப்புகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடவில்லையே' என்ற கவலை அகலும்.

மேஷ செவ்வாயின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 12 ஆம் திகதி மேஷ இரா சிக்குச் செவ்வாய் வருகின்றார். இந்த நேரம் குடும்பச்சுமை கூடுதலாக இருக் கும். பணப்பற்றாக்குறையால் கடன் சுமையும் உருவா கலாம். ஒவ்வாத உணவுகளை உட்கொள்வதன் மூலம் உடல் நலமும் பாதிக்கப்படலாம். கோபத் தைக் குறைத்துக்கொள்வது நல்லது. உத்தியோகத்தில் ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் உறுதியாகலாம். பிற ருக்கு பொறுப்புச் சொல்லி ஏதேனும் தொகை வாங்கிக் கொடுத்தால் அதில் பிரச்சினைகள் உருவாகும்.

சிம்ம புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 13 ஆம் திகதி சிம்ம இரா சிக்குப் புதன் வருகின்றார். 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், சுக ஸ்தானத்திற்கு வரும் பொழுது இல்லத் திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புக் கிடைக்கும். இடப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். தாய்வழி ஆதரவு உண்டு. புதிய முயற் சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தி யோகத்தில் நேர்முகத் தேர்விற்குச் சென்றவர்களுக்கு வெற்றி உண்டு.

இம்மாதம் இல்லத்துப் பூஜை அறை யில் சிவனின் குடும்பப் படம் வைத்து திருவாசகம் பாடி வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்!

இம்மாதம் குடும்பத்தில் உள்ள... ரிக்கப் போகின்றார். இந்த நேரத்தில் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். பூர்வீகச் சொத்துக் களால் வந்த பிரச்சினை அகலும். எடுத்த வேலையை எளிதில் செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் இருந்த குறுக்கீடுகள் அகலும். பொருளாதார முன்னேற்றம் உண்டு. இம்மாதம் செவ் வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து இல்லத்து பூஜை அறையில், முருகப் பெருமானின் படம் வைத்து கந்த சஷ்டி கவசம் பாடி வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்!

இம்மாதம் முற்பாதியைக் காட்டிலும் பிற்பாதி சிறப்பாக அமையும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை கள் அகலும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். சொந்தங்களால் வந்த துயரங்கள் விலகும். பிள்ளை களின் வளர்ச்சி கண்டு பெருமைப்ப டுவீர்கள். வேலவன் வழிபாடு-வெற் றியை வழங்கும். பணிபுரியும் பெண் களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்

வர்களின் குறைகளைத் தீர்ப்பீர்கள். கடன் சுமை குறைய வழிபிறக்கும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடு த்துச் செல்வது நல்லது. சுக்கிரப் பெயர்ச் சிக்குப் பிறகு பணப்பிரச்சினை சரியா கும். பிள்ளைகளின் வேலை வாய்ப்புக் கருதி எடுக்கும் முயற்சிகள் எதிர்பார்த்த நற்பலனைக் கொடுக்கும். பணிபுரியும் பெண்களுக்கு பக்கத்தில் இருப்பவர் களால் சிக்கல்கள் ஏற்படலாம். நந்தி வழிபாடு நன்மை தரும்.

(தொடரும்)

போதைப்பொருள் ஒழிப்பிற்கு ஜப்பான் நிதியுதவி

(கொழும்பு)

நாட்டில் போதைப்பொருள் நடவடிக்கைகளை ஒழிப்பதற் காக 340 மில்லியன் ரூபா நிதியை வழங்குவதற்கு ஜப் பான் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் போதைப்பொருள் நடவடிக்கைகள் அதிகரித்துள்ள நிலையில், போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் அத ற்கு அடிமையாகியுள்ள நபர் களைஅடையாளங்கண்டுகொள்வ தற்கான நவீன உபகரணங் களின் தேவை குறித்து பொலி ஸாரினால் தெளிவுபடுத்தப்பட் டுள்ளது. இதற்கமைய, பொலிஸா ரினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையிலும், தேவை யான நவீன உபகரணங் களைப் பெற்றுக் கொள்வதற் காகவும் ஜப்பான் அரசாங்கத் தினால் இவ்வாறு நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இதன்படி, இதற்கான புரிந் துணர்வு ஒப்பந்தம், நிதிய மைச்சின் செயலாளர் எஸ்.ஆர் ஆட்டிகல மற்றும் ஜப்பான் தூதுவர் சுகியமா அகிரா ஆகி யோருக்கிடையில் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு, நிதி, பொரு ளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக அரசாங்க தகவல், திணைக் களம் குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு எதிராக அநுர, ஷானி அபேசேகர மனுத்தாக்கல்



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்ன ணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரீட் மனுக்களை தாக்கல் செய்து

அரசியல் பழிவாங்கல் குறி த்து விசாரணைகளை மேற் கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு தமக்கு விடுக்கப்பட்ட உத்தரவை இரத் துச் செய்யக் கோரி இந்த மனுக் கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவன்காட் நிறுவனத்தை அடிப்படையின்றி கையகப்படுத் தியதன் ஊடாக நட்டம் ஏற்பட் டுள்ளதாக அதன் தலைவர் நிஸ் ஸங்க சேனாதிபதி ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்த தையடுத்து குறித்த விடயம் தொடர்பாக சாட்சியமளிக்க அநுர குமார திஸாநாயக்க ஜூன் மாதம் ஆணைக்குழுவில் ஆஜரானார்.

அவன்காட் நிறுவனத்தை தான்தோன்றித்தனமாக கைய கப்படுத்தியதால் நட்டம் ஏற்பட் டுள்ளதாக தெரிவித்து நிஸ்ஸ ங்க சேனாதிபதி முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய ஜனா திபதி ஆணைக்குழுவினால் விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது. (ஜ-4)

திட்டமிட்டதை போன்று தேர்தல் நடைபெறும்

திஸாநாயக்க திட்டவட்டம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு திட்டமிட்ட அடிப்படையில் தேர்தலை நடத்தக் கூடியதாக இருக்கும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

தலவாக்கலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாட்டிற்குள் கொரோனா வைரஸ் சாதகமான முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும் தற்போது நிலைமை சற்று

மோசமான நிலையில் உள்ளது.

எனினும், துரதிர்ஷ்டவசமாக இடம்பெற்ற ஒரு சம்பவத்தால் மீண்டும் சர்ச்சை நிலை ஏற்பட்டது. இந்நிலைமையையும் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான பலம் எமது சுகாதார பிரிவினர், முப்படையினர், பொலிஸார் மற்றும் அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

தற்போதைய நிலையால் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பங்கேற்கும் கூட்டங்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. பாரியளவு கூட்டங்களை நடத்தாமல் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சிறு அளவிலான கூட்டங்களை நடத்துமாறு எமக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

நிலைமை விரைவில் சீராகி விடும். எனவே, திட்டமிட்டுள்ளவாறு தேர்தல் நடைபெறும். சஜித்தின் அறிவிப்புகள் எல்லாம் சிறுபிள்ளைத்தனமாகவே இருக்கின்றன. எனவே, அவற்றை செவிமடுத்து சிரிக்கலாம். பதிலளிக்கும் அளவுக்கு அவை முக்கியத்துவம் இல்லை. பொதுத் தேர்தலில் நிச்சயம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பெறுவோம் " என அவர் தெரிவித்தார். (ஜ-4)

செய்தித்துளிகள்

லொறி மோதியதில் பொலிஸ் அதிகாரி பலி

(கொழும்பு)

ஹக்மன , கொங்கல பகுதியில் பொலிஸ் காவலரணில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது லொறியொன்று மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்த நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஏனைய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும், சிகிச்சைக்காக மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

மறு அறிவித்தல் வரை மக்கள் சந்திப்பு இரத்து

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை அடுத்து கல்வி அமைச்சில் நடத்தப்படும் பொது மக்கள் சந்திப்பு மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு நேற்று முன்தினம் விடுத்த ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

கடற்படைத் தளபதிக்கு பதவியுயர்வு

(கொழும்பு)

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அவர், அட்மிரலாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. (ஜ-4)

ஆன்மீகம்

இன்னும் மூன்று மடங்கு உழைக்க முடியும்!

எட்டாம் திருமுறையான திருமூலரின் திருமந்திரம் இந்த ஒரு முகப்படும் தன்மையின் உன்னதத்தைக் குவியாடி உவமையின் மூலமாகவே கூறுகின்றது.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்ததியிற் சுடுமாறு போல
ஆரியன் தோற்றம்முன் அற்றன பலங்களே!

நம்மில் பலர் சக்திக்கேற்ற வேலை கிடைத்தால் போதும். சம்பாதித்து நிம்மதியாக இருக்கலாம் என்று தான் எண்ணுகின்றார்கள். நம்முடைய சக்திக்கு ஏற்ப வேலை கிடைத்தால் போதும் என்று எண்ணுவது பலவீனம்.

வேலைக்கேற்ப சக்தியை உருவாக்கிக் கொள்வது தான் பலம். நமக்கு நாமே சில கட்டுப்பாடுகள் விதித்துக் கொள்வதும் நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்வதும் நம்மிடம் இருக்கும் ஆற்றலை அதிகரிக்கச் செய்யும் உன்னதமான உத்திகள்.

ஒருமுறை செய்தித்தாள் ஒன்றில் வந்த செய்தி இது. பம்பாயில் ஒரு மருத்துவமனை. பலமாடிக் கட்டடம். திடீரென தீப்பிடித்துக் கொண்டது. பதறிப் போனார்கள் அனைவரும். தங்களால் முடிந்த அளவுக்கு நோயாளிகளை இழுத்துக் கொண்டு வெளியே வந்தார்கள் பணிபுரிபவர்கள்.

இன்னும் பலர் கட்டடத்திற்குள்ளேயே சிக்கியபடி கதறிக் கொண்டிருந்தனர். பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் இருக்கும் வார்டை நோக்கி பற்றி எரியத் தொடங்கியது தீ. அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. இம்மியளவும் தன்கை கால்களை அசைக்க முடியாமல் பக்கவாதத்தால் முடங்கிப் போயிருந்த நோயாளிகள் வாரிச் சுருட்டிக் கொண்டு ஒருவர் பின் ஒருவராக வெளியே ஓடி வந்தனர்.

இப்பொழுது எழுந்து ஓடவில்லை என்றால் இனிமேல் நாம் பிழைக்கவே முடியாது. நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற மன எழுச்சி தான் அவர்களை ஓட வைத்தது.

செய்தித்தாளில் வந்த இந்த செய்தி நமக்குத் தெரிவிக்கும் செய்தி என்ன? நாம் அதிகம் உழைப்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் உண்மையில் இதைவிட இரு மடங்கு, மும்மடங்கு உழைக்க முடியும் என்பதை உணர்வதில்லை.

நம் முழுச் சக்தியையும் முன்னேற்றப் பாதை நோக்கி முனைப்புடன் பிரயோகித்தால் முழு நிலவாக ஒளிரலாம். நிலத்தில் சிறிதளவு ஆழம் தோண்டினால் விதைகளைத் தூவி பயிர் வகைகளைப் பெற முடிகிறது. மரங்களைப்பயிரிட மேலும் சில அடி தோண்ட வேண்டியுள்ளது.

கட்டடங்கள் எழுப்புவதற்கு இன்னும் அதிக ஆழம் தேவை. நீர் பெறுவதற்கு அதைவிட கீழே தோண்ட வேண்டும். இன்னும் முயற்சி செய்து பள்ளம் வெட்டினால் கனிம வளங்களைக் காண முடிகின்றது.

இதிலிருந்து என்ன உணர முடிகின்றது? உழைப்பு மனிதனை ஒரு போதும் ஏமாற்றுவதில்லை, மனிதன் தான் உழைப்பை ஏமாற்றுகின்றான்.

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார் மடம்	சாவகச்சேரி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	120	120	60	100
உருளைக்கிழங்கு	140	200	160	200
பச்சைமிளகாய்	150	180	240	300
தக்காளி	130	130	140	140
மரவள்ளிக்கிழங்கு	120	120	120	80
கோவா	150	120	120	120
கரட்	130	170	160	150
பூசணி	50	40	50	40
புடோல்	60	60	60	100
வாழைக்காய்	120	110	100	100
சின்ன வெங்காயம்	160	120	100-250	160
பெரிய வெங்காயம்	80	90	80	100
பாகற்காய்	200	180	220	200
வெண்டிக்காய்	80	80	60	120
கருணைக் கிழங்கு	120	130	120	100
பயற்றங்காய்	80	100	70	100
லீக்ஸ்	120	100	100	120
பீற்றூட்	100	80	120	120
கறிமிளகாய்	200	180	220	240
முருங்கைக்காய்	130	100	100	140
போஞ்சி	150	150	140	120
கத்தரித்தம்புள்ளா	100	80	—	80
கீரை - 1பிடி	30	20	30	30
தேசிக்காய்	300	200	250	300
தேங்காய் (ஒன்று)	70	50	30-60	60-80
இராசவள்ளி	300	250	300	280
வெங்காயப்பூ	250	240	—	280
முள்ளங்கி	100	80	80	80
பொன்னாங்காணி	40	25	40	30
வல்லாரை	15	50	20	20
அரப்பளா	50	60	30-40	60

கழியை விட்டதால் இறந்த ஆமை

ஓர் அழகிய குளம் ஒன்றில் இரண்டு அன்னப் பறவைகள் வாழ்ந்து வந்தன. ஒன்றின் பெயர் விகடம். மற்றொன்றின் பெயர் சங்கடம். அதே குளத்தில் கம்புக்கிரீவன் என்ற ஆமையும் வாழ்ந்து வந்தது.

விகடம், சங்கடம், கம்புக்கிரீவன் ஆகிய மூவரும் நல்ல நண்பர்கள். காலப்போக்கில் மழைப்பொழிவு குறைந்ததால், குளத்தின் நீரளவு குறையத் தொடங்கியது.

இதனைக் கவனித்த அன்னப் பறவைகள், இனியும் இந்தக் குளத்தை நம்பி வாழ்வது பயனற்றது. இனி நாம்வேறொரு குளத்திற்குச் செல்வோம் என்று முடிவு செய்தன. தங்களின் இந்த முடிவைத் தங்கள் நண்பனான ஆமையிடமும் கூறின.

நண்பர்களே. நீங்கள் பறந்து சென்று வேறு ஒரு குளத்தினை அடைந்துவிடுவீர்கள். நான் எப்படி வேறு குளத்திற்குச் செல்வது? எனக்கும் ஏதாவது வழி சொல்லுங்களேன்! என்றது ஆமை.

அன்னப் பறவை விகடன், ஆமையிடம் நண்பா.நாங்கள் ஒரு நீண்ட கழியினைக் கொண்டு வருகிறோம். அதன் ஒரு முனைப் பகுதியை நானும் மற்றொரு முனைப் பகுதியை சங்கடகனும் வாயால் கவ்விப் பிடித்துக் கொள்வோம். நீ அந்தக் கழியின் நடுப்பகுதியில் உன் வாயால் கவ்விக் கொள்ள வேண்டும். நாங்கள் இருவரும் கழியால் உன்னைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்று வேறு ஒரு குளத்தினை அடைவோம் என்று தங்கள் திட்டத்தினைக் கூறியது.

நண்பா, இதில் ஒரு சிக்கல் இருக்கிறது. பறந்து செல்லும் போது நீ எதுவும் பேசக்கூடாது. அவ்வாறு பேசினால் நீ கீழே விழுந்துவிடுவாய். பின்னர் உன்னை எங்களால் காப்பாற்ற முடியாது என்று சங்கடகன் கூறியது.

நண்பர்களே! கவலை வேண்டாம். நான் பேசவே மாட்டேன் என்று உறுதியளித்தது ஆமை.

விகடன் கூறியது போலவே கழியில் ஆமையைத் தூக்கிக் கொண்டு அன்னப் பறவைகள் பறக்கத் தொடங்கின.

ஓர் ஊரின் வழியாகப் பறந்து செல்லும் போது. ஊர் மக்கள் இந்த அதிசயமான காட்சியைப் பார்த்து வியந்தனர். அவர்கள் கூவி ஒலியெழுப்பினர். எங்கிருந்து இந்த சப்தம் வருகின்றது? என்று நினைத்த ஆமை. அன்னப் பறவைகளிடம் கேட்க நினைத்துத் தன் வாயைத் திறந்தது. உடனே. ஆமையின் பிடி கழியிலிருந்து நழுவியது. ஆமை கீழே விழுந்து இறந்தது.

நீதி :

நமக்கு நன்மை செய்கின்றவர்களின். பேச்சை நாம் மதிக்கவேண்டும் என்று பெண் பறவை, ஆண் பறவைக்குக் கூறியது.

ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

வீரப்பரம்பரை

இலங்கை மன்னனிடம் அந்த இரண்டையும் தந்து விடும்படி தூது அனுப்பினார் பராந்தகன்.

முடியாது என்கிற பதில் வந்ததால் அவற்றைப் பெறுவதற்காகத் தன் படையை இலங்கைக்கு அனுப்பினார். அப்போதும் இலங்கை மன்னர் மசியவில்லை.

பாண்டிய மன்னனின் மணிமுடியையும் செங்கோலையும் எடுத்துக் கொண்டு ரோஹணா என்கிற பகுதிக்குச் சென்று விட்டார்.

பின்னாலேயே துரத்திய சோழர் படை ஒரு கட்டத்தில் வழி தெரியாமல் தமிழ்நாட்டுக்குத் திரும்பியது. இந்தக் குறிப்புக்கள் இலங்கையின் வரலாற்றைச் சொல்லும் மஹாவம்சத்தில் இடம்பெற்றுள்ளன.

சோழர்கள் வரலாற்றில் பராந்தகனுக்கு முக்கிய இடமுண்டு. இவர் காலத்தில்தான் சோழர் ஆட்சி தமிழகத்தில் அழுத்தமாக வேரூன்றியது. இனிமேல் இந்த மண்ணில் சோழர்கள் ஆட்சிதான்.

இனி என்ன நடந்தாலும் நம்மை யாராலும் அழிக்க முடியாது என்கிற நம்பிக்கையும் தைரியமும் சோழர் படைக்கு வந்தது.

இந்த இடத்தில் ஒரு குறிப்பு. முதலாம் பராந்தகன் காலம் வரைக்கும் சோழர்களின் வரலாற்றில் ஒரு தெளிவு இருக்கிறது.

அதேபோல ராஜராஜன் ஆட்சிக்காலம் தொடங்கிப் பின்னால் சோழர்களின் இராச்சியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் வரையும் கூட ஒரு புரிதல் இருக்கிறது.

ஆனால் இந்த இடைப்பட்ட காலம் அதாவது முதலாம் பராந்தகன் மறைவிலிருந்து ராஜராஜன் ஆட்சிக்காலம் தொடங்கும் வரைக்குமான வரலாற்றை அறிந்து கொள்வதில் பல தடைகள் உள்ளன.

அதாவது தெளிவாக எதையும் விளக்கும்படியான கல்வெட்டுக்கள் இல்லை என்பதே இதன் பெரிய குறை.

ஓரளவு இன்னாருக்குப் பின்னர் இன்னார் ஆட்சி செய்தார் என்று கூறமுடிந்தாலும் ராஜராஜனின் வாழ்க்கையை விபரிப்பது போன்று இடையே ஆட்சி செய்த சோழர்களின் வாழ்க்கையை விரிவாகக் கூற முடியாத நிலை இருக்கிறது.

இந்தப் பிரச்சினைகளைத் தாண்டி ஓரளவு நம்மால் இந்தக் காலகட்டத்தை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவி செய்பவை கல்வெட்டுக்கள்.

இந்தியாவெங்கும் காணக் கிடைக்கும் மொத்தக் கல்வெட்டுக்களை விடவும் தமிழகத்தில் கிடைக்கும் கல்வெட்டுக்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

தமிழ்நாட்டிலுள்ள ஏராளமான கோயில்களிலும் பிற இடங்களிலுமாகக் கிடைத்திருக்கும் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்களில் ஐம்பது சதவிகிதக் கல்வெட்டுக்களே இது வரையிலும் படியெடுக்கப்பட்டுள்ளன.

படியெடுக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் ஐந்து சதவிகித கல்வெட்டுக்களுக்கே முழுமையான பாடங்கள் கிடைத்துள்ளன. மிஞ்சிய கல்வெட்டுக்களில் இருந்து நமக்குக் கிடைத்திருப்பவை அதன் தொகுப்புகளே.

சங்ககாலத்தில் தமிழகத்தைச் சேரர், சோழர், பாண்டியர் என்கிற மூவேந்தர்கள் ஆண்டதாகத்தான் அனைத்துத் தொல்லியல் ஆதாரங்களும் தமிழ் இலக்கியங்களும் கூறுகின்றன.

அசோகர் காலத்துக் கல்வெட்டுக்களில் மூவேந்தர்களின் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு என்கிறது தொல்காப்பியம்.

சரியாக இந்தத் திகதியில் இந்த வருடத்தில் மூவேந்தர்கள் ஆட்சி நடத்தினார்கள் என்று சொல்லச் சான்றுகள் இல்லாமல் போய்விட்டன.

(தொடரும்)

உன்னையே உன்னால் அடக்கி ஆள முடியா விட்டால் ஒருபொழுதும் உன்னால் மற்றவர்களை அடக்கி ஆள முடியாது. ~ ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

கொரோனா பயங்கரத்தை அலட்சியம் செய்து விடாதீர்கள்

கொரோனா தொற்று நோய் இரண்டாவது அலையாக இலங்கையில் எழுகை பெற்றுள்ளது.

முதலாவது கொரோனா அலை வெற்றிகர மாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதிலும், இரண்டாவது அலையை கட்டுப் படுத்துவதற்குக் கடும் சிரமப்பட வேண்டியுள் ளது.

கொரோனா இரண்டாவது அலை ஏற்படும் ஆபத்து உண்டென்றும் அது போதைவஸ்து கடத்தல்காரர்கள் மூலமாகவே ஏற்படும் என் றும் மருத்துவ அதிகாரிகள் ஆருடம் கூறி யிருந்தனர்.

அவர்கள் கூறியது இம்மியும் பிசகாமல் அரங்கேறியுள்ளது.

தவிர, இலங்கையில் போதைவஸ்து பாவனை என்பது எல்லை கடந்து செல்கிறது.

இதன்காரணமாக எத்தனையோ இளை ஞர்களின் வாழ்க்கை இருண்டு விட்டது.

எனினும் போதைவஸ்து கடத்தல்காரர் களை – விற்பனையாளர்களை கட்டுப்படுத்த முடியவில்லை.

படைத்தரப்பினர் ஒருபுறம்; பொலிஸ் பரியால னம் மறுபுறம்; கடலோரக் காவல் இன்னொரு புறமாக இருந்தாலும் போதைவஸ்து கடத்தல் மிக நுட்பமாக நடந்தாகிறது.

இவ்வாறு போதைவஸ்து கடத்தல் மிக நுட்பமாக நடைபெறுகின்றபோதுதான் பொலி ஸாருக்கும் போதைவஸ்து கடத்தல்காரர் களுக்கும் தொடர்பு உண்டென்ற தகவல்கள் வெளியாகின்றன.

இலங்கையில் போதைவஸ்து என்பது பாரியதொரு பிரச்சினை என்பதை ஏற்றுக் கொண்டு அதனைக் கட்டுப்படுத்த வேண்டும் என உறுதியாக இருந்தவர் முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன.

அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தூக் குத் தண்டனை விதிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

இருந்தும் தென்பகுதி அரசியல்வாதிகள் அவருக்கு ஆதரவு வழங்கவில்லை.

இதற்கு மேலாக, போதைவஸ்துக் கடத்தல் காரர்களை கட்டுப்படுத்தும் விடயத்தில் மைத் திரிபால சிறிசேன முழுக்கவனம் செலுத்தின ராயினும் அவருக்குப் பொலிஸாரின் ஒத்து ழைப்பு இம்மியும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் இப்போது இலங்கை முழு வதும் போதைவஸ்து பாவனை அதிகரித்துள் ளது.

அதிலும் இந்தியாவில் இருந்தான போதை வஸ்து கடத்தல்கள் சர்வசாதாரணமாக நடந் தேறுவதால் கூடவே கொரோனாத் தொற்றும் நம் நாட்டுக்குள் ஊடுருவியுள்ளது.

எனவே இங்கு நாம் கொரோனாத் தொற்றி லிருந்து பாதுகாப்பதற்கான அறிவுறுத்தல் களைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும்.

கொரோனா பற்றிய பயமும் அதன் ஆபத்துக் களும் நம் மனங்களில் இருந்து அகன்றிருக் கலாம். அந்த அடிப்படையில் அசமந்தப் போக் கில் நாம் இருப்போமாயின் பேராபத்து எங் களையும் சுற்றிவளைக்கும்.

அவ்வாறு சுற்றிவளைத்தால் எங்களால் தாங்க முடியாது. எனவே வருமுன் காக்கும் வியூகங்களை இம்மியும் பிசகாமல் பின்பற்று வோம்.

இந்தியாவிலிருந்து மன்னார் பகுதிக்குள் கடல் மார்க்கமாக நுழைய அனுமதிக்காதீர்கள்

மன்னார் அரச அதிபர் பணிப்புரை

(மன்னார்)

இந்தியாவில் இருந்து எவரும் கடல் மார்க்கமாக மன்னார் வருவதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்திய றோலர் படகுகளை இலங்கை கடல் எல்லைக்குள் வர அனுமதிக்கக்கூடாது என கடற்படை அதிகாரியிடம் மன்னார் அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

மன்னார் மாவட்டத் தில் கொரோனா வைரஸ் தொடர்பாக முன்னெடுக் கப்பட்டு வரும் நடவடிக் கைகள் தொடர்பாக ஆரா யும் அவசர கலந்துரை யாடல் நேற்று செவ்வாய் க்கிழமை மன்னார் மாவ ட்டச் செயலகத்தில் அரசா ங்க அதிபர் சி.ஏ.மோகன் றாஸ் தலைமையில் இடம பெற்றது.

குறித்த கலந்துரை யாடலில் மன்னார் மாவ ட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், பொலிஸ் கடற்படை அதி காரிகள், அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண டனர். இதன் போது ஊடக ங்களுக்கு கருத்து தெரி வித்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்,

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வரு கின்ற நிலையில் மன் னார் மாவட்டத்தில் 14 நபர்கள் தனிமைப்படுத் தும் நிலையங்களில் தனி மைப்படுத்தப்பட்டுள்ள னர்.

இந்தியாவில் இருந்து எவரும் கடல் மார்க்கமாக இங்கே வருவதற்கு அனு மதிக்கக்கூடாது என்றும், இந்திய றோலர் படகு களை இலங்கை கடல் எல்லைக்குள் கூட வர அனுமதிக்க வேண்டாம் என்றும் அதற்கு மேலதி கமாக பிரதேச செயலாள ருக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம் என் றும் தெரிவித்தார்.

அவர் மேலும், நோய்க் கட்டுப்பாடுகளை மேற் கொள்ள சுகாதார அதிகா ரிகளுடன் இணைந்து நடவடிக்கைகளை முன் னெடுக்க உரிய தரப்பின ருக்கு கோரியுள்ளதாக வும் அவர் தெரிவித் தார். (ஜ-5-285)

வங்கிக்கிளை இடமாற்றம்

(கரணவாய்)

பருத்தித்துறை மந் திகைச் சந்தியில் இயங்கி வந்த இலங்கை வங்கிக் கிளை இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை தொட க்கம் மந்திகை பொதுச் சந்தைக்கு அருகிலுள்ள கட்டடத்திற்கு இடமாற்ற ப்பட்டுள்ளது.

இக்கட்டடத் திறப்பு விழா காலை 9 மணி யளவில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தின ராக இலங்கை வங்கி யின் விற்பனை மற்றும் ஊடகவழி அபிவிருத்தி பிரதிப் பொது முகாமை யாளர் சி.அமரசிங்க, சிற ப்பு விருந்தினராக பரு த்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தி யட்சகர் வே. கமலநாதன் ஆகியோர் கலந்து கொள் வர். (ஜ-5-8-60)

கொரோனா அச்சத்தால் சந்தேக நபர்களை நீதிமன்றுக்கு அழைத்துச் செல்வது இடைநிறுத்தம்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் காவலில் வைக்கப்பட் டுள்ள சந்தேக நபர் களை நீதிமன்றங்களில முற்ப டுத்தும் நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக் களம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் அச்ச நிலை காரணமாக இந் தத் தீர்மானம் எடுக்கப் பட்டதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலையில் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்ட சந்தேக நபர்கள் சமூக ஊடகங் கள் ஊடான காணொளி நேரலையில் நீதிமன் றங்களில் முற்படுத்தப்படு வார்கள் என்பது குறிப் பிடத்தக்கது. (ஜ-4)

முறிகள் மோசடி குறித்து வாக்குமூலம் பதிவு செய்ய சட்டமா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டு மத்திய வங்கி முறிகள் மோசடியில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களிடம் விசா ரணை செய்து வாக்கு மூலங்களை பதிவு செய்ய சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உத்தர விட்டுள்ளார் என்றும் அந்தவகையில் முன் னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, அர்ஜுன் அலோசியஸ் உட்பட 7 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளுமாறும் சட்டமா அதிபர் பதில் பொலி ஸ்மா அதிபருக்கு அறி வுறுத்தல் வழங்கியுள் ளார் என்றும் அத்தோடு அவ்வாறு பதிவு செய்யப் பட்ட அறிக்கைகளை ஜூலை 25இற்கு முன் சமர்ப்பிக்குமாறு அறிவு றுத்தியுள்ளார் என்றும் சட்டமா அதிபர் திணை க்களம் நேற்று செவ்வா ய்க்கிழமை தெரிவித் துள்ளது.

இந்த மாத ஆரம் பத்தில், மத்திய வங்கி மோசடி தொடர்பாக ரவி கருணநாயக்க உட்பட 7 பேரை கைது செய்வதற் காக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணை உத்தரவை செயற்படுத்து வதை நிறுத்தி மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்தது.

குறித்த மோசடிகள் குறித்த சட்டமா அதிபர் வழங்கிய சமர்ப்பணங் களை ஆராய்ந்த கோட்டை நீதவான் நீதிம ன்றம் ரவி கருணா நாய க்க உட்பட 10 சந்தேக நபர்களுக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் பிடி யாணை உத்தரவை பிறப்பித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஜ-4)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்க ளின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

யாழ்.பிரதேசத்தில் கொழும்புத்துறை வீதி, AV வீதி, துண்டி, நெடுங் குளம், மணியந்தோட் டம், ஹெலன் தோட்டம், உதயபுரம், Infantas Ice Solutions பிறை வேற் லிமிற்ரெட் ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சிபிரதேசத் தில் பெண்ணெவெளி பலாவி ஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேச த்தில் சாளம் பைக்குளம் ஒரு பகுதி, துட்டுவாகை ஒரு பகுதி, பகல அளுத் வத்த கிராமம், பத்தினி யார் மகிழங்குளம் கிரா மம், தவசிகுளம் கிராமம், கிறிஸ்தவ குளம் ஆகிய இடங்களி லும்

மன்னார் பிரதேசத் தில் ஓலைத்தொடுவாய், முள்ளிப்பழம், தள்ளாடி, கடலோரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோ ட்டை, தள்ளாடி இரா ணுவ முகாம, டயலொக்தொலை த்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதே சங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

ஆன்மீகச் சிந்தனைகள்

மகான்கள் அவதாரம் ஏன்?

❖ பெற்றோரின் குணமே பிள்ளைகளுக்கும் வரும். குழந்தைகள் நல்லவர்களாக வளர்வது பெற்றோரைப் பொறுத்ததே.

❖ உடல் அழுக்கு தீர நீராடுவது போல, மன அழுக்குகளான ஆசை, கோபம் நீங்க கடவுள் பக்தியில் ஈடுபட வேண்டும்.

❖ எங்கிருந்து வந்தோம், இனி எங்கே செல்ல வேண்டும் என்று மனிதன் உயிரைப் பற்றிச் சிந்திப் பதே ஞானம்.

❖ வெயில் அதிகமாகும் போது வெம்மை தணிய மழை வருவது போல, அநீதி அதிகரிக்கும் போது நீதியை நிலைநாட்ட மகான்கள் அவதரிக்கிறார்கள்.

இராசிபலன்

15.07.2020
ஆனி 31, புதன்கிழமை
தசமி முன்னிரவு 9.59 மணிவரை
பரணி பிற்பகல் 4.59 மணிவரை
சுபநேரம் 4.30-6.00 மணிவரை
இராகுகாலம் 12.00-1.30 மணிவரை
சந்திராஷ்டமம்- சித்திரை, சுவாதி
கார்த்திகை விரதம் சித்தாமிர்தம்
வளவன்

மேஷம்

திட்டமிட்ட காரியங்களில் திசை திருப் பங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும் நாள், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

ரிஷபம்

பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆளாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் கூடும்.

மிதுனம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

கடகம்

கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப் புக்கள் உங்களை நாடி வரலாம், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

சிம்மம்

சாமர்த்தியமாகப் பேசி காரியங்களை சாதிப்பீர்கள், எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

கன்னி

மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தொழிலில் அதிகாரிகளை அனு சரித்துச் செல்வது நல்லது, பிரயாண பய முண்டு, பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

துலாம்

பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

விருச்சிகம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவார்கள்.

தனுசு

எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறு வீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

மகரம்

வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

கும்பம்

தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டு வார்கள், பொன்னான நாள்.

மீனம்

வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

உன் ஒழுக்கம் என்பது விதை போன்றது

பெறுகை அறிவித்தல்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் - 2020

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த நிறுவனத்தினர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016 (ii) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதி யுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வி யாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 16.07.2020 தொடக்கம் 29.07.2020 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.3000/- (NBT,VATதவிர்ந்த) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

05. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து 30.07.2020ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேச சபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை,சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் பெறு கைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை,தலைமை அலுவலக த்தில் 24.07.2020 ஆம் திகதியன்று மு.ப 10.00மணிக்கு நடைபெறும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

இல	வேலைவிபரம்	மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக)	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் ரம்	கேள்வி பிணை வைப்பு ரூபா	கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம்
1	Supply of visitor chair ,computer table &study desk, Executive Chair Low Back ,steel table , display cupboard , Steel filling cupboard , steel cupboard, library cupboard	0.97	1 மாதம்	தகுதி வாய்ந்த நிறுவனத்தினர்	10000	14.10.2020
2	Supply of high back chair (three types), conference table ,visitors chair (two types) ,low back chair ,kevin sofa ,executive table	0.64	1 மாதம்		6500	14.10.2020
3	Supply of Dust bin	0.645	1 மாதம்		6500	14.10.2020

க.தர்ஷன்
தவிசாளர்,
பிரதேச சபை பெறுகைக் குழு,
வலிகாமம் தெற்கு பிரதே ச சபை.

(C-9892)

Faculty of Allied Health Sciences
University of Jaffna, Sri Lanka

Fourth Year Second Semester Examinations- 2018

The below mentioned examinations for the Faculty of Allied Health Sciences students have been scheduled as follows.

Examination	Date
Fourth Year Second Semester B.Sc in Medical Laboratory Sciences Examination	20th July 2020 onwards
Fourth Year Second Semester B.Sc in Nursing Examination	
Fourth Year Second Semester B. Pharm Examination	

Registrar,
University of Jaffna.

(C-9890)

கீழே விழுந்து...

நிலையில் நேற்றைய தினம் மரண மடைந்துள்ளார். குறித்த சம்பவம் கடந்த 8ஆம் திகதி நெடுங்கேணிப் பகுதிக்கு அண்மையில் இடம்பெற்றது.

குறித்த முதியவர் அன்றையதினம் வவுனியாவிலிருந்து நெடுங்கேணிப் பகுதிக்குப் பேருந்தில் பயணம் செய்துள் ளார்.

இதன்போது பேருந்தை நிறுத்தி இறங்க முற்பட்டபோது தவறிக் கீழே விழுந்த நிலையில் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த அவரை அங்கிருந்த வர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். சிகிச்சை பலனின்றி அவர் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் மதியாமடுப் பகுதியைச் சேர்ந்த கோபால் (வயது - 71) என்ற முதிய வரே மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக நெடுங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர். (ம-3,299)

கொரோனா...

படுத்தி நாட்டு மக்களை பாதுகாப்பதற்கான சவாலை வெற்றி கொள்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள் ளார்.

வைரஸ் பரவலோடு உலகில் பெரும் பாலான நாடுகளுக்கு முன்னர் அதனை ஒழிப்பதற்கு பொறுப்புடைய அரசாங்கம் என்ற வகையில் வெற்றிகரமாக நட வடிக்கை எடுத்தபோது வெவ்வேறு சவால் கள் எழுந்தபோதும் சிறந்த திட்டங்களுடன் அவை ஒவ்வொன்றையும் வெற்றி கொள்ள முடிந்தது எனக் கூறினார்.

கொரோனா வைரஸ் ஒழிப்பிற்காக விசேட ஜனாதிபதி செயலணியுடன் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித் தார்.

எதிர்காலத்திலும் இவ்வாறான சவால் களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தாலும் அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற் கான பொறுப்பை கைவிடப் போவதில்லை என்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களுக்கும் முகங்கொடுப்பதற்கு அர சாங்கம் தயாராகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

மாலை 4 மணி...

தப்பட்டோர் வாக்களிக்கலாம் என தேர்தல் கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று மாலை 4 மணி தொடக்கம் 5 மணிவரை வாக்களிப்பு நிலை யத்துக்குச் சென்று வாக்களிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

விபத்துக்குள்...

மதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பல னின்றி நேற்று மதியம் 12.30 மணியள வில் மரணமடைந்துள்ளார்.

சாவகச்சேரி டச்சு வீதியில் சந்தியைக் கடக்க முயன்ற முதியவரை அவ்வீதியால் வந்த முச்சக்கரவண்டி மோதி தூக்கி வீசிய திலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மறவன்புலவு பகுதியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சிவஞானசேகரம் (வயது-67) என்ற முதியவர் படுகாயமடை ந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் அனுதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இதுதொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

வடமராட்சியில்...

இரண்டு கடற்படையினரால் நேற்று முன் தினம் மீட்கப்பட்டன.

அந்தப் பொதிகளை இந்தியாவிலி ருந்து எடுத்து வந்த படகும் மீட்கப்பட்டது. எனினும் அதனைக் கடத்தி வந்தவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. பட கின் உரிமையாளரும் தலைமறைவாகி யுள்ளார்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பர வல் தீவிர நிலையை எட்டியுள்ளதால் அங்கிருந்து கஞ்சாப் பொதியை யாழ்ப் பாணத்துக்கு கடத்தி வருவோரால் கொரோனா பரவல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நிலையிலேயே கஞ்சா ஏற்றி வந்த படகின் உரிமையாளரையும் கஞ்சா கடத்தி வந்தவர்களையும் கைது செய்யும் நட வடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொதுமக்களின் தக வலுக்கமைய வடமராட்சியில் ஒருவரை இனங்கண்ட அதிரடிப் படையினர் அவரது வீட்டையும் அவரது உறவினர்கள் வீடு களையும் தனிமைப்படுத்தியுள்ளனர். (ம-3,8,60)

கொரோனாவால்...

இந்த வாரம் மிக முக்கியமானது. கொரோனா வைரஸ் தொற்றியிருப்பதை அறியாமல் சிலர் விடுமுறையில் வீடு களுக்கு வந்துள்ளனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டதும் நாங்கள் அனைவரையும் மீண்டும் உள்ளே அழைத்துக் கொண் டோம். எனினும் அவர்கள் சமூகத்தில் நடமாடிய இடங்கள் உள்ளன. இதனால், கொரோனா சமூகத்திற்குள் செல்லாது என்று எவராலும் கூற முடியாது.

அனைவரும் மிகவும் அர்ப்பணிப்புடன் பாதுகாத்துக் கொண்ட இந்த நிலை மையை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள அனைவரும் சுகாதார ஆலோ சனைகளை பின்பற்றுவது மிகவும் முக் கியமானது.

அடுத்த நான்கு, ஐந்து தினங்களில் ஏதோ ஒரு ஆபத்து இருக்கின்றது. முகக் கவசங்களை அணியுங்கள். தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், தொற்றுக்கு உள்ளாகி, மற்றுமொருவரை தொற்றுக்கு உள்ளாக்காதீர்கள் என மக்களிடம் கோரிக்கை விடுப்பதாகவும் இராணுவத் தளபதி குறிப் பிட்டுள்ளார். (ம-3)

இரு பல்கலை...

கத்தில் பூட்டப்பட்டுள்ளது. சுகாதார துறை யினரின் அறிவுறுத்தல்களின் பின்னே வளாகம் திறக்கப்படும்.

இதனால் அச்சம் கொள்ளத் தேவை யில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவரின் சகோதரன் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றி வரும் ஒரு இராணுவ வீரராவார். அவ ருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டதை அடுத்து, கம்பஹாவில் உள்ள சுகாதாரத் திணைக்களத்திலிருந்து கிளி நொச்சி பிராந்திய சுகாதாரத் திணைக் களத்துக்கு உத்தியோகபூர்வமாகத் தகவல் அனுப்பப்பட்டிருந்த நிலையில் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போது அதில் தொற்று இல்லை எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ம-3,114)

கொரோனா வைரஸ்...

பில் உரையாற்றிய அவர், வெலிசர கடற் படைத் தளத்தில் கடற்படை வீரர்களுக்கு தொற்றிய கொரோனாவை கட்டுப்படுத்த நாடு மூடப்பட்டிருந்தாலும், தற்போது கந்தக் காடு புனர்வாழ்வு மையம் மூலம் நோய்த் தொற்று திறக்கப்படுவதால் எழுந்துள்ள நிலைமை குறித்து மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்றார்.

"கந்தக்காடு மறுவாழ்வு மையத்தின் நிலைமை காரணமாக, அங்கிருந்து விடுப்பில் வீட்டிற்குச் சென்ற ஊழியர்கள் பள்ளிகள் மற்றும் கூட்டங்கள் உட்பட பல் வேறு இடங்களுக்குச் சென்று தங்கள் நண்பர்களை அடையாளம் காணும் நட வடிக்கைகளின் எண்ணிக்கையை அதி கரிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து வைரஸ் எளிதில் பரவுகிறது. இதுவரை சமுதாயத் தில் பரவிய கொரோனா நோயாளிகள் ராஜாங்கனை உள்ளிட்ட 06 பகுதிகளிலி ருந்து பதிவாகியுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையைப் பொறு த்தவரை, சமூகத்தில் வைரஸ் பரவும் அபா யம் உள்ளது. இதன் காரணமாக மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவது முக்கி யம். பயணத்தைத் தவிர்ப்பது நல்லது.

எங்களிடம் மட் டுப்படுத்தப்பட்டவாங் கள் உள்ளன. சமூ கத்தில் வைரஸ் பரவினால், தற் போதுள்ள மருத் துவ ம னை க ள் போதுமானதாக இ ரு க் கா து . மேலும், தீவிர சிகிச் சைப் பிரிவுகள் போதுமானதாக இல்லை. இந்த வைரஸைக் கட் டுப்படுத்த வேண்டும். நாங்கள் அவ்வாறு செய்ய வில்லை என்றால், இன்று உயிரு டன் இருப்பவர்களில் சிலர் உயிருடன் இரு க்க மாட்டார்கள், "என்றார் நிபுணர் டாக்டர் சுதத் சமரவீர. (ம-3)

விரைவு பொதிகள் சேவை

DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன

Lanka Cargo Worldwide Express

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 1995
076 283 2397

(3302)

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

பிரான்ஸ் -ரூ.1500/ரூ.1300
ஜேர்மனி -ரூ.1500/ரூ.1300
டென்மார்க-ரூ.1500/ரூ.1300
கொலன்ட்-ரூ.1500/ரூ.1300
பெல்ஜியம்-ரூ.1600/ரூ.1300
இத்தாலி - ரூ.1700/ரூ.1450
லண்டன் - ரூ.1500/ரூ.1150

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.

5 - 8 வேலை நாட்கள்

(C-9889)

எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

லண்டன்-1000/=, பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட்- 1200/=
கனடா- அமெரிக்கா- 1500/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

976,KKS வீதி யாழ்ப்பாணம் 021 2215656	குஞ்சர்கடைசந்தி நெல்லியடி 070 330 5500	பிரதான வீதி சங்கானை 075 3305500	355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999	முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார்	சென்றல் வீதி கொழும்பு 12 076 1221566

இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர் சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற

இரத்தினசாமி அவர்கள்

ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும்.

(3213)

முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).

உடனடி வேலை வாய்ப்பு

* Office Assistant
* Field Officer
* Finance Manager
* English Teacher

A/L சித்தியடைந்த மற்றும் ஆங்கில அறிவுடையோர் விண்ணப்பிக்கலாம்.

(3302)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

Tel : 076 485 4092

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

(3307)

தொடர்பு: றாஜ் - 077 679 6623

ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்

(2979)

பண்டாரிக்குளம், வவுனியா. 076 328 7119

மீண்டும்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

(C-9879)

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

மஹஜன சீட்டிழுப்பில் 100,000/=

13.07.2020 மஹஜன 4182 சீட்டிழுப்பின் ஊடாக மல்லாகம் விற்பனை முகவர் S. சுபாசினியின் விற்பனையில் ரூபாய் ஒரு லட்சம் வெல்லப்பட்டுள்ளது.

(3310)

கிளுவை கதிகால் தேவை

கிளுவங்கதிகால்கள் தேவை. விலைதீர்த்து வெட்டி எடுக்கப் படும். தயவு செய்து தரகர்கள் தேவையில்லை. உரிமையாளர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

இளவாலை, வசாவிளான், உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 315 1326

வேலை வாய்ப்பு

எமது கணினி நிறுவனத்திற்கு பெண் வரவேற்பாளர் தேவை
சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.

* கல்வித் தகமை: O/L
* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

TP: 021 221 5992

(C-9893)

New Sky Computer Training Centre
இல.716, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பீவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9624)

0768226240

மரண அறிவித்தல்



சின்னத்தம்பி நவரத்தினம்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சின்னத்தம்பி-சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னத்தங்கம் தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற தவமணிதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற பகீரதன் மற்றும் பரதன் (லண்டன்), பாலநந்தினி, பத்மிலன் (லண்டன்), பிரபாஞ்சினி (பவா-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாஜினி, வேல்முருகன், சுபாஜினி, காலஞ்சென்ற கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சின்னம்மா மற்றும் செல்வராசா, சபாபதிப்பிள்ளை, தவமணிதேவி, செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்றவர்களான சரஸ்வதி, ஜெயதாஸ், செல்வரத்தினராசா, வேலுப்பிள்ளை மற்றும் ஜெயலட்சுமி, ஜெகதாம்பாள், தர்மகுலசிங்கம், சரோஜினிதேவி, இராசம்மா, பத்மாவதி, விக்னேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆகீஸ், அஷ்மிதா, அபினிஷ், அபிலாஷ், ஆருஜன், ஆகித்தன், அஷ்விகா, அக்ஷிதா, அக்ஷரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 703 4849

(311)

தகவல்: குடும்பத்தினர்

ஈர விழிகளுடன்

இரண்டாம் ஆண்டு நினைவுநாள்

மருதை கிருஸ்னசாமி

அன்புள்ளம் கொண்ட அப்பா உங்களைப் பிரிந்து ஈராண்டு கழிந்தாலும் விழியோர கசிவுடன் நீங்கள் எமக்காக வாழ்ந்த வாழ்க்கை, வாழ்ந்த பின்னும் வாழுகின்றது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

4ம் கண்டம், பேராறு, கற்சிலைமடு

(C-9891)

உங்கள் நினைவுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.